27.10.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### திடக்கழிவில் இருந்து மின்சாரம், இயற்கை உரம்


போபால்: ம.பி., அரசு, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், மின்சாரம், இயற்கை உரம் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்க முடிவு செய்துள்ளது. ம.பி.,யில், முதல்வர் சிவ்ராஜ் சிங் சவுகான் தலைமையிலான, பா.ஜ., ஆட்சி நடக்கிறது. இம்மாநில எரிசக்தி துறை அமைச்சர் ராஜேந்திர சுக்லா கூறியதாவது:ம.பி.,யில், ரேவா மாவட்டம், கோஷ்டா கிராமத்தில், 13 ஏக்கர் நிலப்பரப்பில், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், மின் உற்பத்தி மற்றும் உரம் தயாரிக்கப்படுகிறது. இடப்பற்றாக்குறை காரணமாக, சட்னா மாவட்டம், பந்தா கிராமத்தில், 50 ஏக்கர் நிலத்தில், மேலும் ஒரு பிரிவை அமைக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. இங்கு, சுற்றுப்புற கிராமங்களில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்கள் மூலம், விரைவில், மின்சக்தி மற்றும் உரம் தயாரிக்கப்படும். இத்திட்டம், மின் துறையில் தன்னிறைவு காண வேண்டும் என்ற, மத்திய பிரதேச அரசின் நோக்கத்திற்கு துணை புரியும். இவ்வாறு அவர் கூறினார்.

### ஆப்ரிக்காவில் இருந்து புதிய ரக பருப்பு இறக்குமதி

பெங்களூரு:துவரம் பருப்பு விலை உயர்ந்துள்ளதால், அதற்கு மாற்றாக, ஆப்ரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட, 'அதுசா பருப்பு' கர்நாடகாவின் சில நகரங்களில் விற்பனை செய்யப்படுகிறது.

செயற்கை தட்டுப்பாடுளப்போதும் இல்லாத அளவில் துவரை, உளுத்தம் பருப்பு விலை கிலோ, 220 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. பருவ மழை பெய்யாததால், பருப்பு உற்பத்தி குறைந்ததாக கூறப்பட்டது. ஆனால், மொத்த உற்பத்தியில், 12 சதவீதம் மட்டுமே குறைந்துள்ளதாகவும், பெரும்பாலான பருப்பு பதுக்கி வைத்து, இடைத்தரகர்கள், வர்த்தகர்கள் லாபம் சம்பாதிக்க, செயற்கையான தட்டுப்பாடு ஏற்படுத்தியதாகவும் புகார் எழுந்தது. இக்கட்டான சூழ்நிலையை தவிர்ப்பதற்காக, துவரம் பருப்பு போன்றுள்ள, 'அதுசா பருப்பு' என்ற ரகத்தை, 5,000 டன் அளவில் மத்திய அரசு இறக்குமதி செய்துள்ளது.
மஹாராஷ்டிரா, குஜராத் வழியாக ஹூப்பள்ளி வந்துள்ளது.இந்த ரக பருப்பு, ஆப்ரிக்காவில் விளைவிக்கப்படுவதாகவும், தரத்தை பொறுத்த வரை துவரம் பருப்புக்கு இணையாக இருந்தாலும், வேகும் போது அதிக நேரம் ஆகிறதாகவும் கூறப்படுகிறது. கிலோ, 50 ரூபாய்க்கு விற்கப்படும் இப்பருப்பை மங்களூரு - உடுப்பி மாவட்ட கடலோர பகுதியினர் வாங்கி பயன்படுத்துகின்றனர்.
உற்பத்தி பாதிப்புமாதாந்திர செலவை குறைக்க விரும்பும் மத்திய தர குடும்பத்தினர் மட்டும், இறக்குமதி ரக பருப்பை வாங்குகின்றனர். கர்நாடகாவில் துவரை விளையும் கலபுரகி, பாகல்கோட், விஜயபுரா, பீதர் மாவட்டங்களில் போதிய மழை இல்லாததால், உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

**வடகிழக்கு பருவமழை நாளை துவக்கம்!**




தமிழகத்தில், வடகிழக்கு பருவ மழை நாளை துவங்குகிறது. நடப்பாண்டில், தமிழகத்தில், வடகிழக்கு பருவமழை, ஒரு வாரம் தாமதமாக துவங்குகிறது. தற்போது பருவமழைக்கான அறிகுறிகள் வலுவடைந்துள்ளன. 'வங்கக்கடலின் தென்மேற்கு பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதியால், நாளை முதல், 30ம் தேதி வரை கன மழை பெய்யும்' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.'சென்னையில், நாளை ஒரே நாளில், 30 செ.மீ., மழை பெய்யும்; முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும்' என, சென்னை மாநகராட்சி சுகாதார அதிகாரி பெயரில், 'வாட்ஸ் ஆப்'பில், நேற்று உலா வந்த தகவல் பரபரப்பை ஏற்படுத்தியது. அதே நேரம், நாளை நடக்க இருந்த சென்னை மாநகராட்சி கூட்டமும், ஒரு நாள் முன்னதாக இன்று நடத்தப்படுகிறது. **இதுகுறித்து, மாநராட்சி சுகாதார அலுவலர் கண்ணன் கூறுகையில்,** "நாளை, 30 செ.மீ., மழை பெய்யும் என, வானிலை மையம் அறிவித்த தகவலை தான், ஊழியர்களுக்கு தெரிவித்து, உஷாராக இருக்க அறிவுறுத்தியுள்ளோம்," என்றார்.அதன்பின், "கன மழை பெய்யும் என்று தான் எச்சரித்துள்ளோம். எவ்வளவு மழை பெய்யும் என்பதை, வானிலை ஆய்வு மையம் தான் கூற வேண்டும்," என, மழுப்பினார். **இதுகுறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன்**

**கூறுகையில்,** "இலங்கை அருகே, வங்கக் கடலின் தென் மேற்கு பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி, தமிழகத்தை நோக்கி நகர்ந்து வருகிறது. புதன்கிழமை, தமிழகம் அருகே வந்துவிடும் என, எதிர்பார்க்கப்படுகிறது. நாளை முதல் கன மழைக்கு வாய்ப்பு உண்டு. இதேபோல், மதுரை, திருச்சி பகுதிகளிலும் மழை பெய்யலாம்," என்றார். ஒரே நாளில், 30 செ.மீ., மழை பெய்யும் என்ற தகவல் குறித்து கேட்டபோது, 'கன மழை பெய்யும்; எனினும், 30 செ.மீ., மழை, ஒரே நாளில் பெய்ய வாய்ப்பில்லை' என, வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

### எச்சரிக்கை:

'வங்கக் கடலின் தென் மேற்கு பகுதியில், கடல் மட்டத்தில் இருந்து, 4.5 கி.மீ., உயரத்தில், புயல் சுழற்சி ஏற்பட்டு உள்ளது. இது வலுவடைந்தால், நாளை முதல், 30ம் தேதி வரை, தமிழகம் மற்றும் புதுச்சேரியில், இடியுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்பு உள்ளது. எனவே, கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும், தமிழக கடலோர மாவட்ட மீனவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளை துவங்கும் பருவ மழை, டிசம்பர் வரை பெய்யும் என, தெரிகிறது.

### பள்ளிகளுக்கு விடுமுறை?

கன மழை காரணமாக, நாளை பள்ளிகளுக்கு விடுமுறை விடப்படுமா என, பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகளிடம் கேட்ட போது, 'வானிலை நிலவரத்துக்கேற்ப அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் விடுமுறை குறித்து முடிவு செய்வர்' என்றனர்.

## 'சாகுபடியை பார்க்க செல்லுங்கள்!'வேளாண் அதிகாரிகளுக்கு உத்தரவு

'இருக்கையில் அமர்ந்து வேலை பார்க்காமல், சாகுபடியை அதிகரிக்க சுற்றுப்பயணம் செய்யுங்கள்' என, வேளாண் துறை உயர்

அதிகாரிகளுக்கு, தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. மாநிலம் முழுவதும், சம்பா நெல் சாகுபடி பருவம் துவங்கி உள்ளது. இந்த காலக்கட்டத்தில், 30 லட்சம் ஏக்கருக்கு மேல் சாகு படியை அதிகரிக்க வேண்டும் என, அரசு விரும்புகிறது. டெல்டா மாவட்டங்களில் மட்டும், 12 லட்சம் ஏக்கரில், சாகுபடி மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. ஆனால், சாகுபடி இன்னும் முழுவீச்சில் துவங்கவில்லை. வடகிழக்கு பருவ மழையை எதிர்பார்த்து விவசாயிகள் உள்ளனர். இந்த நிலையில், விவசாயிகளை நேரில் சந்தித்து, சாகுபடியை துவங்கும்படி அறிவுரை வழங்க, அதிகாரிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு உள்ளது. மேலும், சாகுபடி நடவடிக்கைகளை அடிக்கடி ஆய்வு செய்யவும், வேளாண்துறை உயர் அதிகாரிகளுக்கு, அரசு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.இதுகுறித்து வேளாண்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:வடகிழக்கு பருவ மழையை பயன்படுத்தியே, மாநிலம் முழுவதும், முழுவீச்சில் சாகுபடி நடக்கும். இந்த நேரத்தில் தான், அரசின் உணவு தானிய உற்பத்தி இலக்கை எட்ட முடியும். எனவே தான் துறையின் உயர் அதிகாரிகளுக்கு, அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இருக்கையில் அமர்ந்து வேலை பார்க்காமல், ஜன., வரை, ஒவ்வொரு மாவட்டமாக ஆய்வுக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளது. உயர் அதிகாரிகளும் ஆய்வு பணிகளை துவங்க உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

**சோலார் வீடுகள்: கோவை, தேனிக்கு அதிகம்**




தமிழகத்தில், சூரியசக்தி மின்சாரத்துடன் கூடிய, வீட்டுவசதி திட்டத்தில், 157 பேரூராட்சிகளுக்கு, 10 ஆயிரம் வீடுகள் ஒதுக்கப்பட்டு உள்ளன. இதில், கோவை, தேனி, நெல்லை மாவட்டங்களுக்கு அதிக ஒதுக்கீடு கிடைத்துள்ளது.'பேரூராட்சி பகுதிகளில், சூரியசக்தி மின் வசதியுடன் வீடு கட்ட, ஒரு ஏழை குடும்பத்துக்கு, 2.10 லட்சம் ரூபாய் வழங்கப்படும்' என, தமிழக அரசு அறிவித்தது. பேரூராட்சி மூலமாக, குடிசை மாற்று வாரியம் செயல்படுத்தும் இத்திட்டத்தில், 20 ஆயிரம் குடும்பங்கள் தேர்வு செய்யப்பட உள்ளன.இதற்கு தேவையான, 420 கோடி ரூபாயை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி கழகமான, 'ஹட்கோ'விடம் இருந்து பெற, குடிசை மாற்று வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.இத்திட்ட செயல்முறைகளை, வீட்டுவசதி துறை, நகராட்சி நிர்வாக துறை அதிகாரிகள் அடங்கிய குழு இறுதி செய்து உள்ளது. அதில், சில மாறுதல் செய்யப்பட்டுள்ள விவரம், தற்போது தெரியவந்துள்ளது.இதுகுறித்து, நகராட்சி நிர்வாக துறை அதிகாரி கூறியதாவது:இத்திட்டத்தை, இரண்டாக பிரித்து செயல்படுத்த, முடிவு செய்யப்பட்டு உள்ளது. முதல், 10 ஆயிரம் வீடுகள், அனைவருக்கும் வீடு திட்டத்துக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள, 157 பேரூராட்சிகள்; அடுத்த, 10 ஆயிரம் வீடுகள், மீதமுள்ள, 367 பேரூராட்சிகளுக்கு ஒதுக்கப்படும்.இவ்வகையில்,

எந்தெந்த பேரூராட்சிக்கு எத்தனை வீடு என்பது, சமீபத்திய அதிகாரிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதன்படி, தகுதியான ஒதுக்கீட்டாளர் பட்டியல் தேர்வு செய்யப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.

**முக்கியத்துவம் ஏன்**

* முதல், 10 ஆயிரம் வீடுகள் பெற தேர்வு செய்யப்பட்ட, 157 பேரூராட்சிகளில், கோவை, தேனி, நெல்லை, துாத்துக்குடி, நாமக்கல் மாவட்டங்கள், மிக அதிகமாக ஒதுக்கீடு பெற்றுள்ளன

* குறிப்பாக, கோவை மாவட்டத்தில் உள்ள, 12 பேரூராட்சிகளுக்கு, 954 வீடுகள் ஒதுக்கப்பட்டு உள்ளன* மிக குறைந்தபட்சமாக, பெரம்பலுார், விழுப்புரம், ராமநாதபுரம், திருவண்ணாமலை மாவட்டங்கள், 100க்கும் குறைவான வீடுகள் பெற்றுள்ளன* கோவை, தேனி மாவட்டங்கள் முன்னுரிமை பெற்று இருப்பதாக புகார் எழுந்துள்ளது* நகர்ப்புறமாகி வரும் பேரூராட்சிகள் என்ற அடிப்படையில், இந்த மாவட்டங்களுக்கு, அதிக ஒதுக்கீடு கிடைத்துள்ளது; நகர்ப்புற வளர்ச்சி இல்லாத பெரம்பலுார், விழுப்புரம் மாவட்டங்கள் பின்தங்கி உள்ளன என, புகாருக்கு விளக்கம் சொல்லப்படுகிறது* அதிகபட்சமாக, கோவை, 954; தேனி, 917; நெல்லை, 865; துாத்துக்குடி, 769; நாமக்கல், 675 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன* மிக குறைவாக பெரம்பலுார், 25; விழுப்புரம், 40; ராமநாதபுரம், 62; திருவண்ணாமலை, 79 வீடுகள் பெற்றுள்ளன.

**கறிக்கோழி விலை உயர்வு தீபாவளிக்கு மேலும் எகிறும்**



சேலம்:புரட்டாசி மாதமும், ஆயுத பூஜை, விஜயதசமி பண்டிகையும் முடிந்து விட்ட நிலையில், கறிக்கோழி விற்பனை சூடுபிடிக்க துவங்கியுள்ளது. விலையும் உயர்ந்துள்ளது.தமிழகத்தின் முக்கிய நகரங்களுக்கும், கேரளாவுக்கும், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, நாமக்கல், சேலம், திருப்பூர், கோவை, ஈரோடு ஆகிய நகரங்களில் இருந்து கறிக்கோழி விற்பனைக்கு அனுப்பபடுகிறது.புரட்டாசி விரத்தை தொடர்ந்து, சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை என வரிசைக்கட்டியதால், கறிக்கோழியின் தேவை குறைந்ததால், விலையில் சரிவு காணப்பட்டது. இப்போது, விரதம் முடிந்து பூஜை, பண்டிகைகளும் விடை பெற்றுள்ளதால், அசைவ பிரியர்களின் பார்வை கறிக்கோழி பக்கம் திரும்பியதால், விற்பனை சூடுபிடித்துள்ளது. அதற்கேற்ப விலையும் அதிகரித்துள்ளது.இந்நிலையில், அடுத்த மாதம், 10ம் தேதி தீபாவளி பண்டிகை கொண்டாடப்பட உள்ளது. இதனால் கறிக்கோழி விலை மேலும் உயரும் என தெரிகிறது. கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் கறிக்கோழி விலை கிலோவுக்கு, 30 ரூபாய் அதிகரித்துள்ளது.

**நாளைக்கு இந்த ஏரி அவங்களோட பிள்ளைகளுக்கும் உதவுமில்லையா?'**



செங்குன்றம்:மழையற்ற வறுமையால், கந்து வட்டி பிரச்னையில் சிக்கிய தொழிலாளி போல், வறண்ட புழலேரியில் வீசப்பட்ட பிளாஸ்டிக் பாட்டில்களை சேகரித்த முதியவர், 'என் வயிற்றுக்காகத்தான் இதை எடுக்கிறேன். ஆனால், ஏரியும் சுத்தமாகுமில்லே' என்று, யதார்த்தமாய் கேட்டு, சுற்றுச்சூழல் விழிப்புணர்வை நாகரிகமாக உணர்த்தினார். சென்னைக்கு குடிநீர் வழங்கும் புழலேரி, மூலதனமான தண்ணீரை இழந்து, விறைத்து, வெடித்து கண்ணீரை வரவழைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.மழைக்காலத்தில் கிடைக்கும் தண்ணீரை சேமிக்க, வறண்ட காலத்தில், ஏரியை முறையாக ஆழப்படுத்தவோ, அதில் குவிந்துள்ள பிளாஸ்டிக் பாட்டில் உள்ளிட்ட பல்வேறு குப்பை கழிவுகளை அகற்றவோ அரசு, இதுவரை எந்த நடவடிக்கை யும் எடுக்கவில்லை.

### போட்டியே இல்லாமல்...

ஆனால், அலட்சியவாதிகள் ஏரிக்குள் வீசும் பிளாஸ்டிக் பாட்டில்களை, தன் வாழ்வாதாரத்திற்காக சேகரிக்கும், பிச்சைமணியின் செயல் குறிப்பிடத்தக்கது.

துாத்துக்குடி மாவட்டம், புளியம்பட்டியைச் சேர்ந்தவர் பிச்சைமணி, 78. சில ஆண்டுகளுக்கு முன், பிழைப்பு தேடி சென்னை வந்தார். தனியார் நிறுவனங்களில் காவலாளியாக வேலை செய்தார். தனி மனிதன் என்பதால், வேலை செய்யும் இடங்களில் தங்கி விடுவார். மூப்பு காரணமாக, இரண்டு ஆண்டுகளுக்கு முன் அந்த வேலையும் பறிபோனது. வயிற்றுக்கு தெரிந்த ஒரே கேள்வி பசி. அதற்கு விடையளிக்க, பெரிய பையில், பிளாஸ்டிக் பாட்டில்களை சேகரித்து, அதை, பழைய பொருட்கள் விற்பனை கடைகளில் விற்க துவங்கினார். அதற்கும் ஆங்காங்கே போட்டி தான். ஆனாலும், கிடைத்த வருவாயால், பசியாறினார். நீண்ட துாரம் நடந்த களைப்பால், சமீபத்தில், புழலேரிக்கரை மீது ஓய்வெடுத்தார்.வறண்ட ஏரியை பார்க்க வந்த சிலர், அப்போதும், ஏரியை குப்பை தொட்டியாக்கும் அலட்சியத்தில், பிளாஸ்டிக் பாட்டில்களை வீசினர். அதைக்கண்ட அவர் உற்சாகமானார். போட்டியே இல்லாமல் பொருள் சேர்க்கும் களம் கண்டார். ஓய்வு போதும் என்று ஏரிக்குள் இறங்கியவருக்கு, துாக்க முடிந்த அளவு, தேவையான பிளாஸ்டிக் பாட்டில்கள் கிடைத்தன.

## ரூ. 200 வருமானம்:

'இது உங்களுக்கு சிரமமாக இல்லையா 'என்று அவரை கேட்டபோது, 'வெறிச்' என்று அடித்த எதிர் வெயிலையும் பொருட்படுத்தாமல் சிரித்தபடி, "இதிலென்ன தம்பி இருக்கு" என்றார். **மேலும் அவர் கூறியதாவது:**இங்க, ஏராளமான பிளாஸ்டிக் பாட்டில்கள் கிடைக்கின்றன. கொஞ்ச நாளா... இந்த ஏரிதான் என்னோட முதலாளி. ஒரு நாளைக்கு, 10 முதல் 20 கிலோ பாட்டில்கள் கிடைச்சிடும். ஒரு கிலோ பாட்டில், 10 ரூபாய்க்கு வாங்குறாங்க.சாப்பாட்டுக்கும், டீ செலவுக்கும் தாராளமா இருக்கு. எனக்கு, இன்னொரு சந்தோஷமும் கிடைக்குது.

இங்க இருக்கிற பிளாஸ்டிக் பாட்டில்களை எடுப்பதால், ஏரியும் கொஞ்சம் சுத்தமாகுமில்லே.

### அலட்சியம்:

நீர்நிலை, உயிரினங்களோட எதிரி பிளாஸ்டிக். ஆனால், நம்ம ஜனங்க வீட்டு கிணறு, குழாய்களை பாதுகாப்பா வைக்கிறாங்க; ஏரி, குளங்களை பாழாக்கிடுறாங்க. இது என்ன நியாயம்? நாளைக்கு இந்த ஏரி, அவங்களோட பிள்ளைகளுக்கும் உதவுமில்லையா?இவ்வாறு அவர் கூறினார்.பின், மூட்டையை சுமந்தபடி உற்சாகமாக நடந்தார். அவரது நடையில், சுற்றுச்சூழல் காக்கப்பட வேண்டும் என்ற ஆதங்கம் தெரிந்தது. அவர் கேட்ட கேள்வி நம் சந்ததியின் எதிர்கால பாதுகாப்பில், நாம் காட்டும் அலட்சியத்தை சுட்டி காட்டுவதாக இருந்தது.

### காற்றாலை உற்பத்தி குறைந்தது 'சோலார்' மின்சாரம் அதிகரிப்பு

தமிழக காற்றாலைகளில், மின் உற்பத்தி குறைந்து வருகிறது. எனினும், சூரிய சக்தி மின் நிலையங்களில் மின் உற்பத்தி சூடுபிடிக்க துவங்கி உள்ளது.

தமிழகத்தில், 7,498 மெகாவாட் திறனுடைய காற்றாலைகள்; 224 மெகாவாட் திறனுடைய, சூரிய சக்தி மின் நிலையங்கள் உள்ளன. ஆண்டுதோறும், மே மாதம் முதல் செப்., வரை, காற்றாலைகள் மூலம் தினமும், சராசரியாக, 2,000 - 2,500 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். தற்போது, காற்றாலை சீசன் முடிந்துவிட்டது. காற்றாலைகளில், தினமும், 10 மெகாவாட்டிற்கு குறைவாகவே மின்சாரம் கிடைக்கிறது. ஆனால், சூரிய சக்தி மின் நிலையங்களில் இருந்து, 22ல் - 40 மெகாவாட்; 23ல் - 40; 24ல் - 30; 25ல் - 40; 26ல், 30 மெகாவாட் என தொடர்ந்து, மின் உற்பத்தி சூடுபிடிக்க துவங்கியுள்ளது.அதிகாரிகள் கூறியதாவது:தமிழகத்தில் ஏற்கனவே உள்ள, 224 மெகாவாட் தவிர்த்து, கூடுதலாக, 1,200 மெகாவாட் திறனுடைய சூரிய சக்தி மின் நிலையம்

அமைக்கப்பட இருக்கிறது. சூரிய சக்தி மின் நிலையங்களில் தினமும், ஒற்றை இலக்கத்தில் இருந்த மின் உற்பத்தி தற்போது அதிகரித்து வருகிறது.காற்றாலைகளில் இருந்து ஐந்து மாதம் மின்சாரம் கிடைத்தாலும், சூரிய சக்தி மின் நிலையங்களில், ஆண்டுக்கு, 300 நாட்களும் மின்சாரம் கிடைக்கும்.இவ்வாறு அவர் கூறினார்.

**ராமநாதபுரம் மாவட்டத்தில்நிலத்தடி நீரை உயர்த்ததிட்டம்:பயனில்லாத "போர்வெல்களும்' மழைநீர் சேகரிப்பாக மாறுகிறது**

ராமநாதபுரம்:ராமநாதபுரம் மாவட்டத்தில் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த பயனில்லாத "போர்வெல்களை' மழைநீர் சேகரிப்பாக மாற்ற குடிநீர் வடிகால் வாரியம் திட்டமிட் டுள்ளது.

மழைநீர் சேகரிப்பு திட்டத்தை தமிழக அரசு 2001ல் அமல் படுத்தியது. இதையடுத்து நகரங்கள், கிராமங்களில் உள்ள அனைத்து கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு அவசியமாக்கப் பட்டது. அந்த அமைப்பு இருந்தால் மட்டுமே புதிய கட்டடங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இதனால் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்தது. 2006-11 ல் இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

2011 க்கு பின் மீண்டும் மழைநீர் சேகரிப்பு திட்டத்தை அரசு தீவிரப் படுத்தியது. தற்போது ராமநாதபுரம் மாவட்டத்தில் பயனற்ற "போர் வெல்களை' மழைநீர் சேகரிப்பு அமைப்பாக மாற்ற குடிநீர் வடிகால் வாரியம் திட்டமிட்டுள்ளது. இதற்கான வழிமுறைகள், ஆலோசனைகளை மக்களுக்கு வழங்கி வருகிறது. இதன்மூலம் மாவட்டத்தில் 5 சதவீத பயனற்ற "போர்வெல்கள்' மழைநீர் சேகரிப்பாக மாற்றியுள்ளனர்.

குடிநீர் வடிகால் வாரிய அதிகாரி ஒருவர் கூறியதாவது: கட்டடங் களின் மேற்கூரையில் இருந்து வரும் மழைநீரை வாய்க்கால் அல்லது குழாய் மூலம் பயனற்ற "போர்வெல்களில்' விழச் செய்து நீர்மட்டத்தை உயர்த்தலாம். இதற்காக "போர்வெல்லை' சுற்றி வடிகட்டும் குழிகள் ஒரு

மீட்டர் கன அளவில் தோண்ட வேண்டும். "போர்வெல்' பி.வி.சி., குழாயின் குழியின் கீழ்பகுதியை ஒட்டிய பகுதியில் துளையிட வேண்டும். அதன்பின் குழியில் கருங்கல் போட்டு, அதில் மணலால் நிரப்ப வேண்டும்.

அதில் விழும் மழைநீர் வடி கட்டிய நீராக "போர்வெல்லிற்குள்' சென்று நிலத்தடிநீர் மட்டம் உயரும். குழிகள் மூடாமல் இருக்க அதனை சுற்றி தடுப்புச்சுவர் அமைக்க வேண்டும், என்றார்.

**கனமழை எச்சரிக்கை:புதுச்சேரி தாங்குமா?**

வங்கக் கடலில் உருவாகி உள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, கன மழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை புதுச்சேரி அரசு முடுக்கி விட வேண்டும். புதுச்சேரி நகரம், பிரெஞ்சுக்காரர்களால், திட்டமிட்டு, நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட நகரமாகும். நேர் நேரான வீதிகளும், மழை நீர் எங்கும் தேங்காமல் ஓடிச் சென்று கடலில் கலப்பதற்கு வசதியாக, முறையான வடிகால் வாய்க்கால்களும் அமைக்கப்பட்டு இருந்தன.

**வாய்க்கால் ஆக்கிரமிப்பு**

வாய்க்கால்கள் ஆக்கிரமிப்பு, மழை நீர் செல்லும் வழிகளை அடைத்து வீடுகள் கட்டியது, வடிகால் வாய்க்கால்களை முறையாக பராமரிக்காதது போன்ற காரணங்களால், சமீபகாலமாக, லேசான துாறலுக்கே, புதுச்சேரி நகர வீதிகள் வெள்ளக் காடாக மாறி விடுகின்றன.

மேலும், தாழ்வான பகுதிகளில் மழைநீர் குளம்போல தேங்கி நிற்பதும், சாலைகள் மற்றும் குடியிருப்பு பகுதியில் தேங்கும் மழை நீரை மோட்டார் வைத்து இறைத்து வெளியேற்றுவதும் ஒவ்வொரு ஆண்டும் வாடிக்கையாகி விட்டது.

**சென்னைக்கு எச்சரிக்கை**

இந்நிலையில், சென்னையில் ஒரே நாளில் ௩0 செ.மீ., மழை பெய்ய வாய்ப்புள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளதால், சென்னை மாநகராட்சி ஊழியர்கள் உஷார்படுத்தப்பட்டுள்ளனர். புதுச்சேரிக்கும் கன மழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மழை நீர் தேங்கும் பகுதிகளில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு ஏற்கனவே எடுத்துள்ளது. கடந்த காலங்களில் மழைநீர் வடியாமல், சாலையில் தண்ணீர் தேங்கி நிற்கும், இந்திரா சிலை சிக்னல் பகுதியில், மழைநீர் வடிகால் வாய்க்கால் வடிவமைப்பு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

**முன்னெச்சரிக்கை தேவை**

நகரில் உள்ள முக்கிய வடிகால் வாய்க்கால்களை, பொதுப்பணித்துறை நீர்பாசன பிரிவினர் துார் வாரியுள்ளனர். இருந்தபோதும், வாய்க்கால்களில் குப்பைகள் குவிந்து கிடக்கிறது. எனவே, போர்க்கால அடிப்படையில், அனைத்து வாய்க்கால்களையும் அதிகாரிகள் பார்வையிட்டு, சுத்தப்படுத்தும் பணியை முடுக்கிவிட வேண்டும்.வருவாய், உள்ளாட்சி, சுகாதாரம், போலீஸ், தீயணைப்பு உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகளை உள்ளடக்கிய குழுவின் கூட்டத்தை கூட்டி, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விவாதித்து, பணிகளை முடுக்கி விட வேண்டும்.

**ஏற்பாடுகள் தயார்: கலெக்டர் 'பளீச்'**

கனமழை பெய்யும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளதால், இந்த மழைக்கு புதுச்சேரி தாங்குமா? என்ற அச்சம் எழுந்துள்ளது. இதுகுறித்து, கலெக்டர் மணிகண்டனிடம் கேட்டபோது, 'புதுச்சேரிக்கு பலத்த மழை எச்சரிக்கை வந்துள்ளது. ஏற்கனவே, பேரிடர் மேலாண்மை குழு தயார்

நிலையில் உள்ளது. பாதுகாப்பு நடவடிக்கை அனைத்தும் எடுக்கப்பட்டுள்ளது' என்றார்.

**சீமை கருவேல மரங்களை கணக்கெடுக்கும் பணி...துவக்கம் நிலத்தடி நீர்மட்டத்தை குறைப்பதால் அகற்ற உத்தரவு**

வாலாஜாபாத், :நிலத்தடி நீராதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும், சீமை கருவேல மரங்களை முற்றிலும் அகற்ற, மாவட்ட நிர்வாகம், உத்தரவு பிறப்பித்து உள்ளதையடுத்து, கிராம நிர்வாக அலுவலர்கள், ஏரிகளிலுள்ள சீமை கருவேல மரங்களை கணக்கெடுக்கும் பணியை துவக்கி

உள்ளனர். காஞ்சிபுரம் மாவட்டத்தில், 942 பொதுப்பணி துறை ஏரிகளும்; 1,008 ஒன்றிய ஏரிகளும் என, மாவட்டம் முழுவதும், 1,950 ஏரிகள் உள்ளன. இந்த ஏரிகளின் கரைகளில், வேலி காத்தான் மரங்களும்; ஏரிகளுக்குள் சீமை கருவேலம், வெள்ளை கருவேலம் மரங்களும் முளைத்துள்ளன.சுற்றறிக்கை இந்த மரங்களால், கிராமப் பகுதிகளில், நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறையும் என, நீர்மட்ட கணிப்பாளர்கள் கருத்து தெரிவித்து வந்தனர். இதையடுத்து, கடந்த மே தினத்தில் நடந்த, சிறப்பு கிராம சபை கூட்டங்களில், ஏரிகளில் வளர்ந்திருக்கும் சீமை கருவேல மரங்களை முற்றிலும் அகற்ற, ஊராட்சி நிர்வாகங்களை, சிறப்பு கிராம சபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என, மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியது. அதன்படி, அனைத்து ஏரிகளில் உள்ள, சீமை கருவேல மரங்களை அகற்ற, ஊராட்சி நிர்வாகங்கள், சிறப்பு தீர்மானத்தை நிறைவேற்றின. ஆனால், ஒரு சில ஊராட்சிகள் மட்டுமே மரங்களை அகற்றின. பெரும்பாலான ஊராட்சிகள் மரங்களை அகற்றும் பணியை துவக்கவில்லை என, கூறப்படுகிறது. இந்நிலையில், கடந்த

வாரம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் வருவாய் துறை அதிகாரிகளுக்கு, ஊராட்சிகளில் இருக்கும் பொதுப்பணி துறை மற்றும் ஒன்றிய ஏரிகளிலுள்ள சீமை கருவேல மரங்களை கணக்கெடுத்து, புள்ளி விவரத்தை அந்தந்த தாலுகா அலுவலகங்களில் சமர்ப்பிக்க வேண்டும் என, மாவட்ட நிர்வாகம் சுற்றறிக்கை அனுப்பியது. தலைவர்களால்... மேலும், சீமை கருவேல மரங்கள் அகற்றுவதை, ஊராட்சிகள் அளவிலான, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியது.இதுகுறித்து வட்டார வளர்ச்சி அலுவலர் ஒருவர் கூறுகையில், 'நிலத்தடி நீர்மட்டத்தை குறைக்கும் சீமை கருவேல மரங்களை அகற்ற, மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தி உள்ளது. அதன்படி, கிராம நிர்வாக அலுவலர்கள் கணக்கெடுத்து வருகின்றனர். விரைவில், ஊராட்சி தலைவர்கள் மூலமாக, மரங்களை அகற்றும் பணி துவக்கப்படும்' என்றார்.

## இயற்கை இடர்பாடுகளை சமாளிக்க மின்வாரிய பொறியாளர் ஆலோசனை

விழுப்புரம்: பருவமழை வருவதை யொட்டி, இயற்கை இடர்பாடுகளில் இருந்து மக்கள் மின்சாரம் சம்பந்தமான விழிப்புணர்வோடு இருக்க வேண்டுமென மின்வாரிய பொறியாளர் சீனுவாசன் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மின் பகிர்மான வட்ட களப்பணியாளர்கள் இயற்கை இடர் பாடுகளின் போது துரிதமாகவும், உடனடியாக நிவர்த்தி செய்யவும், தளவாட பொருட்கள் மற்றும் வாகனங்கள் தயார் நிலையில் இருக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தங்கள் பகுதியில் ஏற்படும் மின்தடை, மின் பொருட்கள் சேதாரம் குறித்த புகார்களை தங்கள் பகுதிக்கு உட்பட்ட பிரிவு அலுவலர் மற்றும் உதவி செயற்பொறியாளரை தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

தரையில் துண்டித்து கிடக்கும் மேற்புர மின்கம்பிகள், தாழ்வு மற்றும் தொய்வான மின் கம்பிகளை மக்கள் தொட வேண்டாம் என்றும், மின்சார்ந்த பொருட்களில் தன்னிச்சையாக செயல்படாமல் மின்வாரிய பிரிவு அலுவலருக்கு தெரியப்படுத்த வேண்டும்.

இடி அல்லது மின்னலின் போது டிவி, மிக்சி, கிரைண்டர், கணினி, தொலைபேசி ஆகியவற்றை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். திறந்த நிலையில் உள்ள ஜன்னல், கதவு ஆகியவற்றின் அருகே இருத்தல் கூடாது. ஈரம் படிந்த கைகளோடு சுவிட்ச், பிளக்குகளை இயக்குதல் கூடாது.

மின்கம்பம் மற்றும் அவற்றை தாங்கும் கம்பங்களில் கால்நடைகள் கட்டுதல் கூடாது. மழை காலங்களில் மின்மாற்றிகள், கம்பங்கள், மின் பகிர்வு பெட்டிகள், ஸ்டே ஓயர்கள் ஆகியவற்றின் அருகே செல்ல கூடாது.

மின்சாரத்தால் ஏற்படும் தீயை தண்ணீர் மூலம் அணைக்க முயற்சித்தல் கூடாது. இடி, மின்னலின் போது தஞ்சமடைய மின்கம்பிகள், மின் கம்பங்கள், மரங்கள், உலோக கம்பிவேலி ஆகியவை இல்லாத பகுதிகளை தேர்வு செய்ய வேண்டும். அவசர காலங்களில் மின் இணைப்பை விரைந்து துண்டிக்கும் வகையில் மின் கருவிகள் சுவிட்சுகள் இருப்பிடம் அமைய வேண்டும். பொதுமக்கள் விழிப்புணர்வோடும், மிகுந்த முன்னெச்சரிக்கையோடு செயல்பட்டு மின் விபத்துகளை தவிர்க்க வேண்டும். இத்தகவலை விழுப்புரம் மின்மேற்பார்வை பொறியாளர் சீனுவாசன் தெரிவித்துள்ளார்.

## தியாகதுருகம் பகுதியில் பருத்தி செடிகள் செழிப்பு

தியாகதுருகம்: தியாகதுருகம் பகுதியில் பெய்த மழை காரணமாக சுற்றுவட்டார கிராமங்களில் சாகுபடி செய்துள்ள மானாவாரி பருத்தி செடிகள் செழித்து வளர்ந்துள்ளது. தியாகதுருகம் பகுதியில் 8,000 ஏக்கர்

பரப்பில் மானாவாரி நிலங்களில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தென்மேற்கு பருவமழை ஏமாற்றியதால் விதைப்பு பணிகள் தாமதமானது. செப்., மாத முதல்வாரத்தில் பெய்த மழை ஈரத்தை கொண்டு விதைப்பு பணிகளை முடித்தனர். அவ்வப்போது பெய்த லேசான மழை ஈரத்தை கொண்டு செடிகள் வளர்ந்தது. களை பறித்து, ஊட்டச்சத்து உரங்களை தூவி பராமரித்தனர். கடந்த 2 வாரங்களாக இரவு நேரங்களில் மழை பெய்தது. இதன் காரணமாக செடிகள் நன்கு செழித்து பசுமையாக காணப்படுகிறது. பூத்து, பிஞ்சு விடும் தருவாயில் உள்ளதால் காய் புழுக்கள் தாக்காத வகையில் பூச்சு மருந்து தெளித்து வருகின்றனர். கடந்த 3 ஆண்டுகளாக சீரான மழை பெய்ததால் பருத்தி மகசூல் கைகொடுத்தது. பஞ்சுக்கும் நல்ல விலை கிடைத்ததால் லாபம் ஈட்டினர்.

செடிகள் செழித்து வளர்ந்து அதிக காய் பிடித்துள்ளதால், இவ்வாண்டும் கூடுதல் மகசூல் கிடைக்கும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## கன்னங்குறிச்சி மூக்கனேரி சரணாலயத்தில் வெளிநாட்டு பறவைகள் அடைக்கலம்

சேலம்: சேலம், மூக்கனேரி பறவைகள் சரணாலயத்தில், சீஸன் துவங்கியுள்ளதால், ஏராளமான பறவைகள் வந்து கொண்டுள்ளன. இரண்டு ஆண்டுக்கு பின், ஏரியில், நீர் நிரம்பி வருவதால், அப்பகுதி விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

சேலம், கன்னங்குறிச்சியில் உள்ள மூக்கனேரி, 39 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இதில், கடந்த, 2010ம் ஆண்டு, பொதுமக்களின் பங்களிப்புடன், சேலம் மக்கள் குழுவின் முயற்சியில், பறவைகள் சரணாலயம் அமைக்கப்பட்டது. பல லட்ச ரூபாய் செலவில், பறவைகள் தங்கி செல்லும் வகையில், ஏரியின் நடுவில், குழுக்களாக, மரங்கள் நடப்பட்டன. தற்போது, இம்மரங்கள் வளர்ந்து, பறவைகள் தங்கும்

வகையிலான ரம்மியமான சூழல் உருவாகியுள்ளது. மேலும் கடந்த மாதம் வரை, தண்ணீர் இன்றி, வறண்டு கிடந்த மூக்கனேரியில், கடந்த சில நாட்களாக பெய்த மழையால், நீர்மட்டம் அதிகரித்து வருகிறது. மேலும் ஏற்காடு மலைப்பகுதியில் இருந்தும் நீர்வரத்து, சில நாட்களாக அதிகரித்துள்ளதால், ஏரியின் நீர்மட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால், கடந்த இரு நாட்களாக ரணாலயத்துக்கு வரும் பறவைகளின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்து வருகிறது. பல வகையான, உள் மற்றும் வெளிநாடுகளை சேர்ந்த நூற்றுக்கணக்கான பறவைகள், இங்கு வந்துள்ளன. பறவைகளின் இனப்பெருக்க காலம் என்பதால், பறவைகளின் வரத்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு சிலர் பட்டாசு வெடிப்பதாலும், சப்தம் எழுப்புவதாலும், பறவைகளுக்கு இடையூறு ஏற்படுவதாகவும், அதை தடுக்க, போலீஸ் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை எழுந்துள்ளது.

## வடகிழக்கு பருவ மழை துவங்குவதால் உழவு பணியில் விவசாயிகள் சுறுசுறுப்பு

தர்மபுரி: வட கிழக்கு பருவமழை நாளை முதல் தொடங்கும் என, வானிலை அதிகாரிகள் தெரிவித்துள்ளதை அடுத்து, நிலத்தை உழவு செய்யும் பணியில் தர்மபுரி மாவட்ட விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

தர்மபுரி மாவட்டம் விவசாய தொழிலை பிரதானமாக கொண்ட மாவட்டம். மாவட்டத்தில், தென்மேற்கு பருவ மழை மற்றும் வடகிழக்கு பருவமழையை நம்பி, 60 ஆயிரம் ஏக்கருக்கு மேல், சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய்யப்படுவது வழக்கம். இந்தாண்டு, மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை சராசரி அளவை ஒட்டி பெய்த போதும், ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் அதிகமாக பெய்தது. இதனால், மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் சிறுதானிய பயிர்கள் உற்பத்தி

பாதிக்கப்பட்டதுடன், இறவை பாசன பகுதிகளிலும், சாகுபடி பாதிக்கப்பட்டது. இந்நிலையில், நாளை முதல், தமிழகத்தில், வடகிழக்கு பருவ மழை தொடங்கும் என, வானிலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால், தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், விவசாயிகள், சாகுபடி பணிக்காக, உழவு பணியை துவங்கியுள்ளனர். மேலும், இறவை பாசன விவசாயிகள், சிறு தானிய பயிர்கள் மற்றும் நெல், மரவள்ளி கிழங்கு, தக்காளி உள்ளிட்ட பயிர்களை நடவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து, தர்மபுரியை அடுத்து, சேஷம்பட்டியைச் சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது: தர்மபுரி மாவட்டத்தில், வழக்கமாக வடகிழக்கு பருவமழை விவசாயிகளுக்கு, கை கொடுத்து வருகிறது. இதனால், மானாவாரி மற்றும் இறவை பாசன விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். நாளை முதல் வடகிழக்கு பருவமழை பெய்யும் என, அறிவித்துள்ளதால், உழவு பணியை துவங்கியுள்ளோம். மேலும், பசுமை குடில்கள் அமைத்து நாற்றுகள் விற்பனை செய்து வருபவர்கள், அதிகளவில் நாற்றுகளை தயாரித்து விற்பனைக்கு தயாராக வைத்துள்ளனர். அதிக மகசூல் பெற, விதைகளின் முளைப்பு திறன் குறித்து, பரிசோதனை செய்து, விதைகளை விதைக்க விவசாயிகள் தயாராக வைத்துள்ளனர். பருவமழை தொடங்கியவுடன், விதைகள் நடவு செய்யும் பணி மற்றும் நாற்றுகள் நடவு செய்யும் பணியை, மானாவாரி விவசாயிகள் தொடங்க தயாராக உள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

### விவசாயிகள் சங்க ஒன்றிய குழு கூட்டம்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்ட தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின், பர்கூர் ஒன்றிய குழு கூட்டம் நடந்தது. ஒன்றிய தலைவர் தேவராஜ் தலைமை வகித்தார். கூட்டத்தில், பர்கூரை தலைமையிடமாக கொண்டு, புதிய தாலுகா அமைக்க, அரசு உத்தரவிட்டும், இதுவரை செயல்பாட்டு வரவில்லை. இதை உடனடியாக

செயல்பாட்டுக்கு கொண்டு வரவேண்டும். எண்ணேகொல்புதூரில் இருந்து படேதலாவ் ஏரிக்கு கால்வாய் வெட்டும் பணியை துரிதமாக நடத்த வேண்டும். புதிய ரேஷன் கார்டு கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு, உடனடியாக ரேஷன் கார்டு வழங்க வேண்டும். தகுதியுள்ளவர்களுக்கு நிறுத்திவைக்கப்பட்டுள்ள முதியோர் உதவித்தொகையை வழங்க வேண்டும் என்பன உட்பட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில், ஒன்றிய செயலாளர் முனுசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## உழவர் விவாத குழு சார்பில் உணவுத் திருவிழா

கோபி: ஈரோடு மாவட்ட உழவர் விவாத குழு சார்பில், உலக உணவு திருவிழா, கவுந்தப்பாடி பாசன சபை கூட்ட அரங்கில் நேற்று நடந்தது. தலைவர் ராமசாமி தலைமை வகித்தார். மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு மைய செயலாளர் பாலசுப்பிரமணியம் உணவு குறித்து விழிப்புணர்வு தொகுப்பை வெளியிட்டார். அப்போது அவர் பேசுகையில், 'ஐக்கிய நாடுகள் சபையில் அறிவிக்கப்பட்ட உலக உணவு தினம், விளை பொருட்களை உற்பத்தி செய்யும், உழவர்களின் அமைப்பாக உழவர் விவாத குழு நடத்தப்படுவது ஒரு விழிப்புணர்வு ஆகும். உணவு பற்றி விழிப்புணர்வை நாம் உருவாக்கி வீணாகும் பொருட்களை காப்பாற்றப்பட வேண்டும். உற்பத்தி செய்த பொருட்களை பாதுகாக்க கட்டமைப்பு வசதி இல்லை. இதனால் ஆண்டுக்கு, ரூ.60 ஆயிரம் கோடி மதிப்புள்ள பொருள் வீணாகிறது. ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் சேமிக்கவும், விற்பனை வசதியினையும் ஏற்படுத்தி தர வேண்டும். இந்தியாவில் 40 சதவீதம் உணவு வீணாக்கப்படுகிறது. திருமணங்கள் போன்ற நிகழ்ச்சிகளில் உணவை வீணாக்காமல் இருக்க திட்டமிட்டு செயல்பட வேண்டும்' என்றார்.

## விலை கண்காணிப்பு கமிட்டியை மீண்டும் கூட்ட நடவடிக்கை, மாவட்ட கலெக்டர் உத்தரவாதம்

ஊட்டி: 'விலை கண்காணிப்பு கமிட்டியை மீண்டும் கூட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி 'நெலிகோலு' குறு, சிறு தேயிலை சாகுபடியாளர்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டு சங்கத்தின் சார்பில், அதன் தலைவர் ராமன், கலெக்டர் சங்கரிடம் வழங்கிய மனு; நீலகிரி தேயிலை விலை வீழ்ச்சி ஏற்பட்டதை தொடர்ந்து, பல்வேறு அமைப்புகள் ஐகோர்ட்டில் வழக்கு தொடுத்தன. அதன் விளைவாக, மாவட்ட கலெக்டர் தலைமையில், மாவட்ட தேயிலை கண்காணிப்புக் குழு அமைக்க வேண்டும். தேயிலை சந்தைப்படுத்தம் கட்டுப்பாட்டு ஆணையம் மற்றும் பான் இந்தியா ஏல விதிப்படி, விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலைக்கு, விலை வழங்க வேண்டும்.

தொழிற்சாலைகளில், சிறு விவசாயிகள், தேயிலை வாரிய அலுவலர் மற்றும் தொழிற்சாலை உரிமையாளர்கள் அடங்கிய கூட்டுக் குழுவை அமைக்க வேண்டும். தொழிற்சாலை உரிமையாளர்கள், தாங்கள் விற்பனை செய்யும் தேயிலை துாளின் விலை விபரத்தை, ஒளிவு மறைவின்றி அறிவிக்க வேண்டும். விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலைக்கு மாவட்ட கண்காணிப்புக் குழுஅறிவிக்கும் 'பென்ச் மார்க்' விலையை வழங்க வேண்டும்.

நீலகிரி தேயிலையின் தனித்தன்மையை விளம்பரப்படுத்தி, விற்பனையை அதிகப்படுத்த வேண்டும். குறு, சிறு தேயிலை தொழிற்சாலைகள் அமைக்க தனி நபர் விவசாயிகளை ஊக்குவித்து, மானியம், வங்கிக் கடன்களை எளிய முறையில் வழங்க வேண்டும். இவ்வாறு, ராமன் கூறியுள்ளார். மனுவை பெற்றுக் கொண்டு, கலெக்டர் சங்கர் கூறுகையில்,“அரசு வக்கீலின் ஒப்புதல் பெற்று, விலை கண்காணிப்பு

கமிட்டியை மீண்டும் கூட்ட நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகளே இணைந்து தொழிற்சாலைகளை அமைத்து கொள்ள வேண்டும் ," என்றார்.

## 200 ஏக்கர் தேயிலை தோட்டம் நீலகிரியில் தினமும் விற்பனை

குன்னூர்: நீலகிரியில் நாள்தோறும், 200 ஏக்கர் பரப்பில், தேயிலை எஸ்டேட்டுகள், விற்பனை செய்யப்படுவதாக, தேயிலை வாரியத்திடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி 'நெலுகோலு' சிறு, குறு விவசாயிகள் மேம்பாட்டு சங்க தலைவர் ராமன், செயலாளர் தருமன் உட்பட நிர்வாகிகள், தேயிலை வாரிய செயல் இயக்குனர் பால்ராஜை நேரில் சந்தித்தனர். அப்போது அவர்கள் கூறியதாவது:நாள் ஒன்றுக்கு சராசரியாக, 200 ஏக்கர் வரை, தேயிலை தோட்டங்கள், வீட்டுமனைகளுக்காகவும், மாற்று விவசாயத்துக்காகவும் விற்கப்படுகின்றன. இந்த நிலை மாற, தேயிலை வாரியத்தில், திருத்தப்பட்ட சட்டத்தை அமல்படுத்த வேண்டும். விஞ்ஞானி சுவாமிநாதன் பரிந்துரைப்படி, பசுந்தேயிலைக்கு, 30 ரூபாய் வழங்க வேண்டும். சிறு தொழிற்சாலைகளை அமைக்க, விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேண்டும்.

இவ்வாறு, அவர்கள் கூறினர்.

## மகிழ்ச்சி ! : தொடர்ச்சியாக வேலை கிடைப்பதால் : ஒட்டன்சத்திரம் விவசாய தொழிலாளர்கள்

ஒட்டன்சத்திரம்: மழை காரணமாக விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக வேலை கிடைத்து வருவதால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் விவசாய

நிலங்கள் அதிகமாக உள்ளது. இவற்றில் முக்கால் பங்கு மானாவாரி நிலங்கள். மழை பெய்தால் மட்டுமே இந்நிலங்களில் விவசாயம் சிறப்பாக நடக்கும். இதனால் இப்பகுதியில் விவசாய தொழிலாளர்கள் அதிகம் உள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாக சரிவர மழை பெய்யாததால், இவர்களில் பலர் மாற்று வேலைக்கு சென்று விட்டனர். எஞ்சியுள்ளோர் மட்டுமே விவசாய கூலி வேலை செய்து வருகின்றனர்.

இவர்கள் அனைவரும் இரண்டு ஆண்டுகளாக நூறு நாள் வேலைத் திட்டத்திலும் இடம் பெற்றனர். இந்நிலையில் இந்த ஆண்டு ஓரளவு மழை பெய்ததால் இத்தொழிலாளர்களுக்கு கிராக்கி ஏற்பட்டது. மானாவாரி நிலங்களில் ஒரே நேரத்தில் வேளாண் பணிகள் தொடங்கியதே இதற்கு முக்கிய காரணம். விதைப்பு பணிகள் முடிந்து மக்காச்சோளம், பருத்தி, சோளக்காடுகளில் தற்போது களை எடுக்கும் பணி முழு வீச்சில் நடந்து வருகிறது. உரிய காலத்தில் களை எடுத்தால்தான் பயிர் நன்றாக செழித்து வளர்ந்து நல்ல மகசூலை கொடுக்கும்.

இதனால் <உள்ளூர் பகுதியில் பற்றாக்குறை இருந்தால் வெளியூர்களில் இருந்தும் விவசாய தொழிலாளர்கள் வரவழைக்கப்படுகின்றனர்.

இதற்கென்று தனியாக புரோக்கர்கள் உ<ள்ளனர். முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு களை எடுப்பதற்கான ஒரு நாள் கூலி ரூ.50க்கு மேல் அதிகரித்துள்ளது.

இவ்வாறு கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக தொடர்ச்சியாக வேலை கிடைத்து வருவதால் விவசாய கூலித் தொழிலாளர்களில் பலர் நூறு நாள் வேலைக்கு செல்லாமல் விவசாய வேலைக்கு திரும்பிவிட்டனர். தீபாவளி கொண்டாட இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் தொடர்ந்து வேலை கிடைத்து வருவது, அவர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி <உள்ளது.

## சின்னாளபட்டியில் வாரச்சந்தை கூடுவதற்கு நடவடிக்கை தேவை

சின்னாளபட்டி: சின்னாளபட்டியில் வாரச்சந்தை ஏற்படுத்த வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். சின்னாளபட்டி பேரூராட்சியில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வசிக்கின்றனர். கலிக்கம்பட்டி,என்.பஞ்சம்பட்டி, அம்பாத்துரை, முன்னிலைக்கோட்டை, செட்டியபட்டி,காந்திகிராமம்,ஆலமரத்துப்பட்டி உள்ளிட்ட கிராம ஊராட்சிகளில் ஒரு லட்சம் பேர் வசிக்கின்றனர். ஆயினும் இவர்கள் வாரச்சந்தைக்காக செம்பட்டி, திண்டுக்கல்லிற்கு செல்ல வேண்டியுள்ளது. 20 ஆண்டுகளுக்கு முன்னர் சின்னாளபட்டியில் வாரச்சந்தை இயங்கி வந்தது. காலப்போக்கில் சந்தை கூடுவது நிறுத்தப்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் மளிகை கடைகள், காய்கறி கடைகள் செயல்பட்டாலும், கிராமத்து பெண்கள் வாரம் ஒருமுறை சந்தைக்கு சென்று தங்களுக்கு தேவையானவற்றை வாங்கி வருவதை பெரிதும் விரும்புகின்றனர். மேலும், சந்தைகளுக்கு சென்று வியாபாரம் செய்வதையே தொழிலாக கொண்டவர்கள் ஏராளமானவர்கள் உள்ளனர். எனவே, சின்னாளபட்டியில் வாரச்சந்தை கூடுவதற்கு பேரூராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## எள் மகசூலில் விவசாயிகள்

குஜிலியம்பாறை: குஜிலியம்பாறை ஒன்றியம் டி.கூடலூர், கருங்கல், லந்தகோட்டை ஊராட்சி பகுதிகளில், மானாவாரி விவசாயமே கூடுதலான அளவில் நடைபெறுகிறது.கம்பு, சோளம், எள், கடலை, நரிப்பயறு ஆகியவை மானாவாரியாக நன்கு முளைத்து மகசூலை எட்டியுள்ளது. கருங்கல் விவசாயி சிவலிங்கம் கூறியதாவது; அறுவடையான எள் செடியை களத்திற்கு கொண்டு சென்று காயவைத்து, எள்ளை தனியாக பிரித்து எடுத்து விற்பனைக்கு அனுப்புவோம். நடப்பு பருவத்தில் ஓரளவிற்குத்தான் மகசூல் கிடைத்துள்ளது. இன்னும் மழை

பெய்தால்தான் கடலை விவசாயம் செய்த மக்கள் பயன்பெறுவர், என்றார்.

### மழை இல்லாததால் குறைகிறது பழநி அணைகளுக்கு நீர்வரத்து

பழநி: மழை இல்லாத காரணத்தினாலும், வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதாலும் கடந்த வாரங்களில் உயர்ந்திருந்த அணைகளின் நீர்மட்டம் குறைந்து கொண்டே வருகிறது.

மேற்குத்தொடர்ச்சி மலைத்தொடர் பழநி, கொடைக்கானல் பகுதியில் பெய்த மழையால் கடந்த சில தினங்களுக்கு முன் 10 கனஅடி முதல் 200கனஅடிவரை அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டமும் உயர்ந்தது. இந்நிலையில் கடந்த 10 நாட்களாக மழை இல்லாததால் அணைகளுக்கு வினாடிக்கு 3 கனஅடி முதல் 20கனஅடி தண்ணீர் தான் வருகிறது. இதனால் உயந்திருந்த நீர்மட்டம் படிப்படியாக குறைந்துகொண்டே வருகிறது. நேற்றைய நிலவரம்: வரதமாநதி அணைக்கு வினாடிக்கு 20 கனஅடி நீர்வரத்தும், 3 கனஅடி வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 56.01 அடி(மொத்தம் 67 அடி), குதிரையாறு அணைக்கு 7 கனஅடி நீர்வரத்தும், 3 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது, நீர்மட்டம் 43.67 அடி (மொத்தம் 80 அடி), பாலாறு-பொருந்தலாறு அணைக்கு வினாடிக்கு 12கனஅடி நீர்வரத்து, 12கனஅடி வெளியேற்றப்படுகிறது, நீர்மட்டம் 32.78அடி(மொத்தம் 65அடி)பரப்பலாறு அணைக்கு 3 கனஅடி நீர்வரத்தும், 5கனஅடி நீர்வெளியேற்றப்படுகிறது, நீர்மட்டம் 70அடி(மொத்தம்90அடி), நங்காஞ்சியாறு அணை நீர்மட்டம் 22.04 அடி(மொத்தம்ம் 40 அடி).

குடகனாறு அணைநீர்மட்டம் 10.14அடி(மொத்தம் 27.4அடி)ஆக உள்ளது.

**விதைப்பு "சீசன்' துவங்கும் முன்பேமானிய விலை நெல் விதைகள் குளோஸ்**

முதுகுளத்தூர்:பருவ மழை துவங்கும் முன்பே நெல்லுக்கான மானியம் தீர்ந்து விட்டதாக முதுகுளத்தூர் வேளாண் அலுவலர் கூறியதால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இந்தாண்டு பருவமழை துவங்குவதில் ஏற்பட்ட தாமதத்தால் நெல்விதைப்பில் தொய்வு ஏற் பட்டுள்ளது. இருந்தாலு<ம் மழையை எதிர்பார்த்து மானிய விலையில் நெல் விதைகள் வழங்குவதை வேளாண் துறையினர் ஆக., மாதத்தில் துவக்கினர்.

பருவமழை காலதாமதமாக பெய்தால் மானிய விலையில் நெல் விதைகள் கிடைக்காமல் கூடுதலான விலை கொடுத்து வெளி மார்க்கெட்டில் நெல் விதைகளை வாங்கும் நிலைக்கு விவசாயிகள் தள்ளபட்டுள்ளனர்.இதுகுறித்து முதுகுளத்தூர் விவசாயி சேது கூறுகையில், "" பருவமழை சீசன் தாமதமாகி வரும்வேளையில் மானிய விலையில் நெல் விதைகள் வழங்கு வதை நீட்டிப்பு செய்திருக்க வேண்டும். கடமைக்காக நெல் விதைகள் விற்பனை செய்வது வருத்த மளிக்கிறது.

நெல் விதைகள், மானியம் குறித்து கிராம பகுதிகளில் வட்டாரத்திற்கு இருவர் வீதம் ஏஜென்டுகளை நியமித்துள்ள போதிலும் முறையான தகவல் இல்லாததால் விவசாயிகள் பாதிக்க பட்டுள்ளனர்", என்றனர்.இதுகுறித்து முதுகுளத்தூர் வேளாண் உதவி இயக்குநர் ராஜேந்திரன் கூறுகையில், "" நெல் விதைகளுக்கான மானியம் முடிந்துவிட்டது. நெல் நுண்ணூட்ட சத்து, நெல் விதைப்பான், "ஆயில்

இன்ஜின்' மானிய விலையில் வழங்கபடுகிறது. அதேபோல் கேழ்வரகு விதை ரூ 25 க்கு பதிலாக மானியத்தில் ரூ.13 க்கு வழங்கபடுகிறது", என்றார்.

**கருவேல மரங்கள் ஆக்ரமிப்பில் ரகுநாதகாவிரி விவசாயத்துக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும்:விவசாயிகள் அச்சம்**

முதுகுளத்தூர்:முதுகுளத்தூர் ரகுநாத காவிரி ஆறு பல ஆண்டுகளாக மராமத்து செய்யாததால் கருவேல மரங்கள் சூழ்ந்து மழைநீர் கண்மாய்களுக்கு செல்வதில் சிக்கல் நிலவுகிறது.

கமுதியிலிருந்து வரும் குண்டாறு, பேரையூரிலிருந்து பிரிந்து வரும் பரளையாறு, கிருது மால் நதியி லிருந்து வரும் உபரி நீர் ரகுநாத காவிரி ஆற்றில் சேருகிறது. இதன் மூலம் முதுகுளத்தூர், காக்கூர், காத்தாகுளம், கீழச்செல்வனூர் வரை 60 க்கும் மேற்பட்ட பெரிய கண்மாய்கள் நிரம்புகிறது. கண்மாய் தண்ணீர் மூலம் அப்பகுதிகளில் 12 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசனவசதி பெறுகிறது. ரகுநாத காவிரி ஆற்றில் ஏற்படும் வெள்ள பெருக்கை கட்டுபடுத்தும் வகையில், ஆங்கிலேயர் காலத்தில் தானாக தண்ணீர் வெளியேறும் அமைப்பில் கட்டுமான பணிகள் உள்ளது. ஆனால் கடந்த 50 ஆண்டு களில் 3 முறை மட்டுமே ஆற்றில் வெள்ளபெருக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த 8 ஆண்டுகளாக மராமத்து பணிகள் நடக்காததால் ரகுநாத காவிரி ஆறு கருவேல மரங்களால் சூழ்ந்துள்ளது. இதனால் மழை காலங்களில் கண்மாய்க்கு தண்ணீர் வரத்து தடைபட்டுள்ளது. இதேநிலை தொடர்ந்தால் இன்னும் சில ஆண்டுகளில் ரகுநாத காவிரி உருக்குலையும் அவலம் உருவாகும்.இதுகுறித்து முதுகுளத்தூர் மாடசாமி கூறியதாவது: ரகுநாத காவிரி ஆற்றின் மூலம் முதுகுளத்தூர் பெரிய கண்மாய், காக்கூர், புளியங்குடி, காத்தாகுளம், பூக்குளம் உட்பட 60 க்கும் மேற்பட்ட விவசாய நிலங்கள் பயனடைந்தது. ஆறு மராமத்து செய்வதில் ஏற்பட்டுள்ள தொய்வால், மழை பெய்தால் கண்மாய்களுக்கு தண்ணீர் செல்லாமல்

தரிசு நிலங்களில் தேங்கி வீணாகிறது. இப்பகுதியில் ஆறு இருந்தும், வான்மழையை மட்டும் நம்பி விவசாயம் செய்யும் நிலைக்கு விவசாயிகள் தள்ள பட்டுள்ளனர். இதனால் முதுகுளத்தூர் பகுதி விவசாயம் அழிந்து கருவேல மரங்கள் வளர்க்கவும், பிளாட்டுகளாகவும் உருமாறி வருகிறது என்றார்.

**ராமநாதபுரம் மாவட்டத்தில்நிலத்தடி நீரை உயர்த்ததிட்டம்:பயனில்லாத "போர்வெல்களும்' மழைநீர் சேகரிப்பாக மாறுகிறது**

ராமநாதபுரம்:ராமநாதபுரம் மாவட்டத்தில் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த பயனில்லாத "போர்வெல்களை' மழைநீர் சேகரிப்பாக மாற்ற குடிநீர் வடிகால் வாரியம் திட்டமிட் டுள்ளது.

மழைநீர் சேகரிப்பு திட்டத்தை தமிழக அரசு 2001ல் அமல் படுத்தியது. இதையடுத்து நகரங்கள், கிராமங்களில் உள்ள அனைத்து கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு அவசியமாக்கப் பட்டது. அந்த அமைப்பு இருந்தால் மட்டுமே புதிய கட்டடங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இதனால் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்தது. 2006-11 ல் இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

2011 க்கு பின் மீண்டும் மழைநீர் சேகரிப்பு திட்டத்தை அரசு தீவிரப் படுத்தியது. தற்போது ராமநாதபுரம் மாவட்டத்தில் பயனற்ற "போர் வெல்களை' மழைநீர் சேகரிப்பு அமைப்பாக மாற்ற குடிநீர் வடிகால் வாரியம் திட்டமிட்டுள்ளது. இதற்கான வழிமுறைகள், ஆலோசனைகளை மக்களுக்கு வழங்கி வருகிறது. இதன்மூலம் மாவட்டத்தில் 5 சதவீத பயனற்ற "போர்வெல்கள்' மழைநீர் சேகரிப்பாக மாற்றியுள்ளனர்.

குடிநீர் வடிகால் வாரிய அதிகாரி ஒருவர் கூறியதாவது: கட்டடங் களின் மேற்கூரையில் இருந்து வரும் மழைநீரை வாய்க்கால் அல்லது குழாய் மூலம் பயனற்ற "போர்வெல்களில்' விழச் செய்து நீர்மட்டத்தை

உயர்த்தலாம். இதற்காக "போர்வெல்லை' சுற்றி வடிகட்டும் குழிகள் ஒரு மீட்டர் கன அளவில் தோண்ட வேண்டும். "போர்வெல்' பி.வி.சி., குழாயின் குழியின் கீழ்பகுதியை ஒட்டிய பகுதியில் துளையிட வேண்டும். அதன்பின் குழியில் கருங்கல் போட்டு, அதில் மணலால் நிரப்ப வேண்டும்.அதில் விழும் மழைநீர் வடி கட்டிய நீராக "போர்வெல்லிற்குள்' சென்று நிலத்தடிநீர் மட்டம் உயரும். குழிகள் மூடாமல் இருக்க அதனை சுற்றி தடுப்புச்சுவர் அமைக்க வேண்டும், என்றார்.

## களைக்கொத்தி விற்பனை களைகட்டுகிறது

ஆர்.எஸ்.மங்கலம்:களைக்கொத்தி கருவியின் விலை இருமடங்கு அதிகரித்துள்ளதால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர் ஆர்.எஸ்.மங்கலம், புல்லமடை, ஆவரேந்தல், செங்குடி, சேத்திடல் உள்ளிட்ட சுற்றுப்புற பகுதிகளில் நெல், மிளகாய் போன்ற பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப் பட்டுள்ளது. அண்மையில் விதைப்பு செய்யப்பட்ட நெல்பயிர்கள் முளைக்க துவங்கியுள்ளது. நெல் பயிர்களுடன் களைகளும் அதிகமாக முளைத்துள்ளது. இவற்றை அகற்ற விவசாயிகள் களை கொல்லி மருந்துகளை தெளித்து வருகின்றனர்.

இருந்தும் களைகளை கட்டுப்படுத்த முடியவில்லை. களைகொத்தி மூலமாக களைகளை அகற்றவும், மண்ணை கிளறி விடவும் செய்தால் மட்டுமே எதிர்பார்த்த மகசூல் கிடைக்கும் என்பதால் விவசாயிகள் களை கொத்திகள் வாங்குவதில் ஆர்வம் காட்டிவருகின்றனர். இதனால் ஆர்.எஸ்.மங்கலம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் களைகொத்தி வியாபாரம் களைகட்டி வருகிறது. விற்பனை அதிகரித்துள்ளதால் விலை இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு ரூ.60க்கு விற்பனையான களைகொத்தி, இந்த ஆண்டு ரூ.120 க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இது குறித்து சிவகங்கையைச் சேர்ந்த களைக்கொத்தி வியாபாரி பிரபு கூறுகையில்,"" காரைக்குடி, சிவகங்கை, முப்பையூர் பகுதிகளில் இருந்து

களைக்கொத்திகள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. தரத்தை பொறுத்து விலை நிர்ணயம் செய்யப் படுகிறது.களைகொத்திகளில் போடப்பட்டுள்ள கைபிடி கம்புகள், பள்ளுகள் நீண்டநாள் பயன்படுத்த கூடியதாகவும், விவசாயிகளின் கைகளுக்கு ஏற்றதாகவும் தயார் செய்துள்ளதால் விலை சற்று அதிகம்," என்றார்.

**வறட்சியை தாங்கி வளரும் "திரூர்குப்பம் நெல்' அறிமுகம்**

ராமநாதபுரம்;வறட்சியை தாங்கி வளரும் திரூர் குப்பம் (டி.கே.எம்.,13) என்ற புதியரக நெல்லை ராமநாதபுரம் வேளாண் அறிவியல் மையம் அறிமுகப் படுத்தியுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் 1.20 லட்சம் எக்டேரில் நெல் சாகுபடி யாகிறது. வறட்சி, உவர் மண் போன்ற காரணங்களால் மகசூல் குறைகிறது. இதனால் விவசாயிகள் பொருளாதார இழப்பை சந்தித்து வருகின்றனர். மோட்டா ரக நெல் வறட்சியை தாங்கி வளரும். ஆனால் சன்னரக நெல்லிற்கே நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் மோட்டா ரகத்தை சாகுபடி செய்வ தில்லை. சன்னரக நெற் பயிர்கள் வறட்சியால் அதிகளவில் பாதிக்கப்படு கின்றன. இதை தடுக்கும் வகையில் ராமநாதபுரம் வேளாண் அறிவியல் மையம் நன்கு வறட்சியை தாங்கி வளரும் சன்னரகத்தைச் சேர்ந்த "திரூர்குப்பம்' என்ற புதிய ரகத்தை அறிமுகப்படுத்தி யுள்ளது. இதுகுறித்து அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் சீகன்பால், உதவி பேராசிரியர் அருள்மொழி கூறியதாவது: ராமநாதபுரம் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் நெல், பால் பிடிக்கும் பருவத்தில் நீரின்றி பாதிக்கப்படுகிறது. திரூர்குப்பம் நெல் நீண்டநாட்களுக்கு வறட்சியை தாங்கும். மானவாரியாக 120 நாட்களில் அறுவடைக்கு வரும். உவர் மண்ணிலும் வளரும். நல்ல மகசூல் கிடைக்கிறது. சன்னரகத்தை பொறுத்த வரை ஆயிரம் நெல் மணிகள் 16

கிராமிற்குள் இருக்க வேண்டும். திரூர்குப்பம் 13.5 கிராம் மட்டுமே உள்ளது. இதனால் நல்ல விலை கிடைக்கும், என்றார்.

### மீன்வரத்து குறைவதால்பாம்பன் மீனவர்கள் கவலை

ராமேஸ்வரம்:ஆழ்கடல் பகுதியில் நிலவும் பருவநிலை மாற்றம் காரணமாக மீன்வரத்து குறைந்துள்ளதால் பாம்பன் மீனவர்கள் பலத்த பொருளாதார இழப்புக்கு உள்ளாகியுள்ளனர். ராமேஸ்வரம் அருகே பாம்பனில் இருந்து விசைப்படகுகள் மூலம் மீனவர்கள் மீன்பிடி தொழில் செய்துவருகின்றனர். இவர்கள் பெரும்பாலும் மன்னார் வளைகுடா ஆழ்கடல் பகுதியில் வலைவிரித்து மீன்பிடிப்பது வழக்கம். கடலில் காற்று, நீரோட்டம் சாதகமாக இருந்தால் மட்டுமே மீனவர்களுக்கு எதிர்பார்த்த மீன்வரத்து கிடைக்கும். பலத்த காற்று வீசினாலோ, நீரோட்டம் அதிகரித்தாலோ வலையில் மீன்கள் சிக்குவதில்லை. இதனால் மீனவர்கள் அவ்வப்போது பலத்த இழப்பை சந்தித்துவருகின்றனர்.

வழக்கம்போல் பாம்பனில் இருந்து கடந்த 22ம் தேதி 50க்கும் மேலான விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்க சென்றனர். சூறாவளி காற்றுடன் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டதால் எதிர்பார்த்த மீன்கள் கிடைக்கவில்லை. மிகக்குறைவான மீன்களுடன் மீனவர்கள் கரை திரும்பினர். இதனால் பாம்பன் விசைபடகு மீனவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.20 ஆயிரம் வரை இழப்பு ஏற்பட்டது.

இதுகுறித்து மீனவர் எம்.பேட்ரிக் கூறுகையில்,"" சுனாமிக்கு பின் கடலில் ஏற்படும் பருவ நிலை மாற்றத்தால் மீன்பிடி தொழில் நாளுக்கு நாள் நலிவடைந்து வருகிறது. மீன் பிடிப்பதற்காக கடலுக்குள் செல்லும் ஒவ்வொரு விசை படகுக்கும் ரூ. 40 முதல் 60 ஆயிரம் வரை செலவாகிறது. மீன்வரத்து குறைவதால் பலத்த நஷ்டத்தை சந்தித்து வருகிறோம்," என்றார்.

## நெற்பயிருக்கு இழப்பீடு: கலெக்டரிடம் மனு

சிவகங்கை:காரைக்குளத்தில் வறட்சியால் பாதித்த நெற்பயிர்களுக்கு இழப்பீடு தொகை வழங்க வேண்டும்,என கலெக்டர் எஸ்.மலர்விழியிடம் விவசாயிகள் புகார் அளித்தனர்.

இளையான்குடி ஒன்றியம், காரைக்குளம் குரூப்பிற்கு உட்பட்ட கிராமங்களில் 420 விவசாயிகள், 2012-13ம் ஆண்டில், 1,200 ஏக்கரில் நெல் நடவு செய்திருந்தனர். இதற்கான பயிர் காப்பீட்டிற்கான பிரீமிய தொகையும் செலுத்தினர். அப்போது ஏற்பட்ட வறட்சி காரணமாக நெற் பயிர் கருகியது. காப்பீடு செய்த பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.8 ஆயிரம் வீதம் இழப்பீடு வழங்க வேண்டும். ஆனால், கருகிய நெற்பயிர்களுக்கு 3 ஆண்டாகியும் இழப்பீடு தொகை வழங்கப்படவில்லை.

புகார்: இதையடுத்து, கலெக்டரிடம் காரைக்குளம் கிராம விவசாயிகள் புகார் அளித்தனர். உரிய நடவடிக்கை எடுப்பதாக விவசாயிகளிடம் தெரிவித்தார். காரைக்குளம் ஊராட்சி தலைவர் கே.முருகேசன் கூறுகையில்,"" நெற் பயிருக்காக ஏக்கருக்கு ரூ.290 வீதம் 420 விவசாயிகள் சுமார் 1,200 ஏக்கர் நெற்பயிர்களுக்கு பிரீமிய தொகை கட்டினர். வறட்சி பாதித்த பகுதியை ஆய்வு செய்த புள்ளியியல், வருவாய்துறையினர் அருகில் உள்ள சேதாம்பல் குரூப் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கி விட்டு, எங்கள் கிராம விவசாயிகளை புறக்கணித்து விட்டனர். இதனால், இழப்பீடு கேட்டு மனு செய்துள்ளோம்," என்றார்.

## சிவகங்கையில் "செங்கரும்பு'விளைச்சல் அதிகரிப்பு

சிவகங்கை:தை பொங்கல் விற்பனைக்காக சிவகங்கையில் கரும்பு விளைச்சல் அதிகரித்துள்ளது. பொங்கலுக்கு இன்னும் 3 மாதங்கள் உள்ளன. "தை பொங்கல்' விழா என்றாலே கிராமங்களில் பானை உடைத்தல், "மாப்பிள்ளை கல்' தூக்குதல், கபடி போன்ற

விளையாட்டிற்கு பஞ்சம் இருக்காது. தொழில் ரீதியாக நகரங்களில் வசிப்பவர்கள் கூட, பொங்கலை குடும்பத்துடன் கிராமங்களில் கொண்டாடுவது வழக்கம். இதன் காரணமாக பொங்கல் அன்று கிராமங்கள் புத்துணர்ச்சியுடன் காணப்படும். நாவிற்கு சுவை தரும் "செங்கரும்பு':

வீர விளையாட்டுக்களால் மக்கள் மகிழ்ச்சி கண்டாலும், நாவிற்கு சுவை தரும் சர்க்கரை பொங்கல், "செங்கரும்பு' போன்றவற்றை சாப்பிட்டால் தான் பொங்கலை முழுமையாக கொண்டாடிய திருப்தி கிடைக்கும். அந்த வகையில், சிவகங்கை பகுதியில் விளையும் "செங்கரும்பு'களுக்கு தனி ருசி உண்டு.

இப்பகுதி விவசாயிகள் கிணற்று பாசனம் மூலம் "செங்கரும்பு' நடவு செய்துள்ளனர். குறிப்பாக சிவகங்கை அருகே மேலசாலூர், பெருமாள்பட்டி, செவல்பட்டி, கொளுஞ்சிபட்டி, கண்டாங்கிபட்டி, உசிலம்பட்டி பகுதி விவசாயிகள் "செங்கரும்பு' நடவு செய்துள்ளனர். தற்போது இக்கரும்பு நன்கு விளைந்து அறுவடைக்கு தயாராகி வருகிறது.

சிவகங்கை அருகே மேலசாலூர் விவசாயி ஏ.அம்மாசி கூறுகையில்,""பங்குனியில் பார் அமைத்து, கரும்பு நடவு செய்தோம். ஏக்கருக்கு ரூ.70 முதல் 90 ஆயிரம் வரை செலவு செய்துள்ளோம். தற்போது "செங்கரும்பு' சதை பிடிக்கும் தருணத்திற்கு வந்துள்ளது.

மார்கழி துவக்கத்தில் இருந்து அறுவடை செய்யப்படும் "செங்கரும்பு' பிற மாநிலங்களுக்கு செல்லும். மார்கழி கடைசியில் தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கு "செங்கரும்பு'களை வியாபாரிகள் வாங்கி செல்வர். 300 கட்டு (கட்டுக்கு தலா 10 கரும்பு) உள்ள ஒரு லாரி லோடுக்கு ரூ.4 முதல் 5 ஆயிரம் வரை விலை கிடைக்கும். நன்கு விளைந்தால் ஏக்கருக்கு 40 லாரி

லோடு வரை கிடைக்கும். ஒரு ஏக்கர் "செங்கரும்பு' ரூ.2 லட்சத்திற்கு விற்றால் தான், விவசாயிக்கு லாபம் கிடைக்கும்," என்றார்.

**மரக்கன்று நட்டு பராமரிப்பதன் அவசியம் குறித்துஅரசு, தனியார் அமைப்பின் நடவடிக்கை வேண்டும்**

காரியாபட்டி:மாவட்டத்தில் புவிவெப்பமயமாவதை தடுக்க பொது இடங்களில் மரக்கன்று நட்டு பராமரிக்கும் பழக்கத்தை இளைஞர்களிடையே ஊக்குவிக்க வேண்டும். இதன்மூலம் எதிர்காலத்தில் அதிகமழை கிடைப்பது மட்டுமின்றி சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படும். இதற்கான விழிப்புணர்வை அரசு, தனியார் அமைப்புகள் ஏற்படுத்த வேண்டும்.

மாவட்டத்தில் மரங்கள் வெட்டப்பட்டு அதன் எண்ணிக்கை குறைந்ததால் மழையும் குறைந்து புவி வெப்பமயமாகி வருகிறது. இதனால் மழைக்காலத்திலும் வெயிலின் தாக்கம் அதிகம் உள்ளது. போதிய மழை இல்லாமல் குடிநீர் தட்டுப்பாடு அதிகரிக்கும் நிலை உருவாகியுள்ளது. ஆனால் பள்ளி, கல்லூரி, அரசு விழா, தலைவர்கள் பிறந்த நாள் விழா உள்ளிட்ட பல்வேறு விழாக்களில் நடப்படும் மரக்கன்றுகள் தொடர்ந்து பராமரிக்கப்படுகிறதா என்பது கேள்விக்குறி.

வெயில்தாக்கம் அதிகரிப்பு: நான்குவழிச்சாலை அமைக்கப்படுவதற்கு முன் அதன் இரு புறமும் மரங்கள் அடர்த்தியாக வளர்ந்து சோலைவனமாக காட்சியளித்தன. மக்கள் நீண்ட தூரம் நடந்தே சென்றனர். வாகன பெருக்கத்தை காரணம் காட்டி ரோட்டை அகலப்படுத்த ஏராளமான மரங்கள் வேறுடன் வெட்டி அகற்றப்பட்டன. ஆனால் பதிலுக்கு ஒரு மரக்கன்று கூட நடப்படவில்லை. வெயிலின் தாக்கத்தால் மக்கள் சிரமப்படுகின்றனர். நிழலின் அருமை வெயிலில்தான் தெரியும் என்பது நிருபணமாகிவருகிறது. இந்த நிலை தொடராமல் மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பது அனைவரின் கடமை.

இதனால் எதிர்காலத்தில் மழை உரிய நேரத்தில் பெய்யும். நிலத்தடி நீர் மட்டம் உயரும். விவசாயம் செழித்து, குடிநீர் பிரச்னை தீரும். எனவே மரக்கன்றுகளை நட இளைஞர்கள் முன்வரவேண்டும். பூமி வெப்பமயமாவதை தடுத்து மழை பெற, அவற்றை முறையாக பராமரிக்க வேண்டும். பல்வேறு நிகழ்ச்சிளையொட்டி நடப்படும் மரக்கன்றுகளை முறையாக பாதுகாத்து பராமரித்து வளர்க்க சம்பந்தப்பட்டவர்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டும். இதற்கு அரசு, தனியார் அமைப்புகள் விழிப்புணர்வு ஏற்படுத்தி உதவ வேண்டும்.

காரியாபட்டி மணிகண்டன்,"" அனைவரும் வீட்டிற்கு ஒரு மரக்கன்று நட்டு வளர்க்க வேண்டும். பொது அமைப்புகள் மூலம் சாலையோரம், அரசு அலுவலகங்கள், பொது இடங்களில் மரம் வளர்க்க வேண்டும். ஒரு மரம் வெட்டப்பட்டால் பத்து மரக்கன்றுகளை நட மரத்தை வெட்டுபவருக்கு உத்தரவிடவேண்டும். அப்போதுதான் எதிர்கால சந்ததியினர், போதிய மழையை பெற முடியும். குடிநீர் பிரச்னையின்றி கிடைக்கும். காற்று மாசுபடுவது, புவி வெப்பமயமாவதைத்தடுத்து ஆரோக்கியமாக வாழ முடியும். என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## "நீர்ப்பிடிப்புப் பகுதிகள், வாய்க்கால்களை தூர்வார வேண்டும்'



வடகிழக்கு பருவமழை விரைவில் தொடங்க உள்ளதால் உடனடியாக நீர்ப்பிடிப்புப் பகுதிகள், வரத்துக் வாய்க்கால்களைத் தூர்வார வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் இரா.கஜலெட்சுமி வலியுறுத்தினார். வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் திங்கள்கிழமை ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் இரா.கஜலெட்சுமி தலைமை வகித்துப் பேசியது:காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள வட்டாட்சியர்கள் தங்கள் வட்டத்துக்கு உள்பட்ட பகுதிகளில் பேரிடர் பாதிப்புக்கு உள்ளாகும் பகுதிகள் அடங்கிய விவரங்கள், அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களை பாதுகாப்பாகத் தங்க வைக்க திருமண மண்டபங்கள், பள்ளிக் கட்டடங்கள் ஆகியவற்றை தேர்வு செய்து கொள்ள வேண்டும்.

மாவட்ட தீயணைப்பு- மீட்புப்பணித் துறையினர் பாதுகாப்புக்குத் தேவையான உபகரணங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். பேரிடர் நேரங்களில் கூடுதல் சிறப்புக் குழுக்களை அமைத்துச் செயல்பட வேண்டும்.

மேலும் பொதுப்பணித் துறை, நீர்வள ஆதார அமைப்பு, ஊரக வளர்ச்சித் துறை ஆகியவற்றின் கட்டுப்பாட்டிலுள்ள ஏரிகள், குளங்கள், நீர்ப்பிடிப்புப் பகுதிகள் வாய்க்கால்களைத் தூர்வார வேண்டும். நீர்வரத்து ஆதாரங்கள், கண்மாய்களில் மண் அரிப்பும் உடைப்பும் ஏற்பட்டால் உடனுக்குடன் சரிசெய்ய வேண்டும். அதற்குத் தேவையான மணல் மூட்டைகளை தயார் நிலையில் வைத்துக்கொள்ளவேண்டும். கூட்டுறவு, வழங்கல் துறை போதுமான உணவுப்பொருள்களைக் கையிருப்பில் வைத்துக்கொள்ள வேண்டும். சுகாதாரத் துறையினர் போதுமான மருத்து, மாத்திரைகளை இருப்பு வைத்துக்கொள்ள வேண்டும். மருத்துவக் குழுவினர் ஆம்புலன்ஸ் ஊர்தியுடன் தயார் நிலையில் இருக்க வேண்டும். வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை ஆகிய துறைகளில் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் அதன் விவரங்களை அறிக்கையாக வருவாய்த் துறைக்கு அளிக்க வேண்டும்.

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், தொற்றுநோய்த் தாக்குதலிருந்து மீள்வது குறித்து பள்ளி மாணவ, மாணவிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
சாலைகளில் சேதம் ஏற்பட்டால் அதனை சரிசெய்ய ஏதுவாக நெடுஞ்சாலைத் துறையினர் இயந்திரங்களைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

உள்ளாட்சி அமைப்புகளான நகராட்சிகள், பேரூராட்சிகளிலுள்ள பணியாளர்களைக் கொண்டு கழிவுநீர்க் கால்வாய் அடைப்புகளை அகற்றி சரிசெய்ய வேண்டும். மாவட்ட வருவாய் அலுவலர், ஊரக வளர்ச்சித் திட்ட இயக்குநர், கோட்டாட்சியர்கள் மேற்பார்வை

அலுவலராகப் பணியாற்றுவார்கள். ஏதேனும் பேரிடர் ஏற்பட்டால் தகவல்களை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மாவட்ட நிர்வாகத்துக்குத் தெரிவிக்க வேண்டும். அனைத்து அரசுத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்றார். இக் கூட்டத்தில் அனைத்து அரசுத் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

**மீனவர் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு**

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்படும் தொடர் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜிடம் அதிமுக எம்.பி.க்கள் குழுவினர் தில்லியில் திங்கள்கிழமை நேரில் வலியுறுத்தினர்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதும், சிறைபிடிக்கப்படுவதும் தொடர்கதையாகி வருகிறது. சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி மீன்பிடிக்க வந்ததாகக் கூறி, தமிழகத்தின் தூத்துக்குடி, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த 86 மீனவர்களை இலங்கைக் கடற்படை சிறைபிடித்தது. இதைத் தொடர்ந்து, அந்நாட்டின் பல்வேறு சிறைகளில் நீதிமன்றக் காவலில் அவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து, கைது செய்யப்பட்ட மீனவர்களையும் அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகள், வலைகளை விடுவிக்க வலியுறுத்தியும் தமிழக முதல்வர் ஜெயலலிதா பிரதமர் நரேந்திர மோடிக்கு பல முறை கடிதம் எழுதினார். இதன் தொடர்ச்சியாக, வெளியுறவுத் துறை மூலம் இலங்கை அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் முடிவில் தங்கள் நாட்டு சிறையில் உள்ள 86 தமிழக மீனவர்களை அக்டோபர் 28-ஆம் தேதி விடுதலை செய்ய இலங்கை அரசு ஒப்புக் கொண்டது. இதுபற்றி உறுதியான தகவல் கிடைத்தவுடன் தமிழக அரசுக்கு இந்த விவரத்தை மத்திய அரசு தெரிவித்தது.

முதல்வர் உத்தரவு: இந்நிலையில், தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் உத்தரவின்படி மக்களவை, மாநிலங்களவையில் உள்ள அதிமுக

உறுப்பினர்கள் 49 பேரில் 48 பேர் சுஷ்மா ஸ்வராஜை தில்லியில் உள்ள அவரது அமைச்சக அலுவலகத்தில் திங்கள்கிழமை காலை 11 மணிக்கு சந்தித்தனர். அமெரிக்காவுக்கு சென்றுள்ள இந்திய எம்.பி.க்கள் குழுவில் மாநிலங்களவை அதிமுக உறுப்பினர் விஜிலா சத்யானந்த் இடம் பெற்றுள்ளதால் அவர் இந்தச் சந்திப்புக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை. மக்களவைத் துணைத் தலைவர் மு.தம்பிதுரை, மக்களவை அதிமுக குழுத் தலைவர் டாக்டர் பி. வேணுகோபால், மாநிலங்களவை அதிமுக குழுத் தலைவர் நவநீதகிருஷ்ணன் ஆகியோர் தலைமையில் அக்கட்சி எம்.பி.க்கள் சுஷ்மா ஸ்வராஜுடன் சுமார் 15 நிமிடங்கள் பேசினர். அப்போது, தமிழக முதல்வர் ஜெயலலிதா, சுஷ்மா ஸ்வராஜுக்கு எழுதிய கடிதத்தை அவரிடம் தம்பிதுரை அளித்தார். இது குறித்து பின்னர் செய்தியாளர்களிடம் தம்பிதுரை கூறியதாவது:

தமிழக மீனவர்கள் தங்களது பாரம்பரிய கடல் பகுதிகளில் மீன்பிடித்து வருகின்றனர். ஆனால், இலங்கை அரசு வேண்டுமென்றே அந்நாட்டு கடற்படையினரை ஏவி தமிழக மீனவர்களைத் தாக்கியும், துன்புறுத்தியும், மீன்பிடி வலைகளைச் சேதப்படுத்தியும், படகுகளைப் பறிமுதல் செய்தும் வருகிறது. இதனால், மீனவர்கள் தங்களது வாழ்வாதாரத்தை இழந்து பாதிக்கப்பட்டுள்ளனர்.

கச்சத்தீவை மீட்க வேண்டும்: அண்மைக் காலங்களில் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டு அந்நாட்டு சிறைகளில் தமிழக மீனவர்கள் 86 பேர் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுதலை செய்வதாக இலங்கை அரசு அறிவித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. அந்த மீனவர்களை விரைவில் விடுதலை செய்து தாயகம் கொண்டு வர மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக மீனவர்களின் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண கச்சத்தீவை திரும்பப் பெறுவது மட்டுமே ஒரே வழி. இதுதொடர்பாக 2008-ஆம் ஆண்டில் தமிழக முதல்வர் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். அந்த வழக்கில் தமிழக அரசும் மனுதாரராக உள்ளது. இதுதொடர்பாக

பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா பல முறை எழுதிய கடிதங்களின் நகல்களை சுஷ்மா ஸ்வராஜிடம் அளித்தோம்.

தூதர் மூலம் நடவடிக்கை: நடுக்கடலில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்கள் எதிர்கொண்டு வரும் பிரச்னைகளுக்கு நிரந்தரக் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். இதுகுறித்து பிரதமர் மோடியும் இலங்கை அதிபருடன் பேசியுள்ளார். இலங்கையில் உள்ள இந்தியத் தூதர் மூலம் இந்த பிரச்னைகள் தொடர்பாக பேசி உரிய தீர்வு காணப்படும் என்று சுஷ்மா ஸ்வராஜ் தெரிவித்தார்.

ஆழ்கடல் மீன்பிடித்தலை ஊக்குவிப்பதன் மூலமாக மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடையும் என்பதால், அதற்கான திட்டத்திற்கு சிறப்பு நிதியாக ரூ.1,520 கோடி ஒதுக்க வேண்டும் என்று பிரதமருடனான சந்திப்பின்போது தமிழக முதல்வர் வேண்டுகோள் விடுத்திருந்தார். அதை எம்.பி.க்கள் சுட்டிக்காட்டியபோது, உரிய முறையில் பரிசீலிப்பதாக சுஷ்மா ஸ்வராஜ் குறிப்பிட்டார் என்றார் தம்பிதுரை.

**மக்காச்சோளம் சாகுபடி பயிற்சி**

மக்காச்சோளம் சாகுபடி குறித்த ஒரு நாள் வயல்வெளிப் பயிற்சி செல்லம்பட்டி வட்டம் பூச்சம்பட்டி கிராமத்தில் நடைபெற்றது.

மதுரை வேளாண்மைக் கல்லூரியில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையம்சார்பில் நடைபெற்ற இப்பயிற்சிக்கு அதன் திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா.வீரபுத்திரன் தலைமை வகித்தார். மக்காச்சோளம் சாகுபடியில் விதைப்பு, உரம், நீர், மற்றும் களை நிர்வாகம் உள்ளிட்ட உழவியல் தொழில்நுட்பங்கள் குறித்து அவர் விளக்கம் அளித்தார்.

உதவிப்பேராசிரியர் (பூச்சியல்) பா. உமாராணி, மக்காச்சோளத்தை தாக்கும் முக்கிய பூச்சிகளையும் அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளையும் எடுத்துரைத்தார். மக்காச்சோளத்தில் நோய் மேலாண்மை பற்றிய தொழில்நுட்பத்தினை உதவிப்பேராசிரியர் (நோயியல்)

க.மனோன்மணி விளக்கிக் கூறினார். ஆராய்ச்சியாளர்கள் அருண்குமார் மற்றும் சி. கருணைதாசன் ஆகியோர் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்தனர். சுமார் 50-க்கு மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

**விவசாயிகள் கவனத்துக்கு: கம்பு, மிளகாய் விலை முன்னறிவிப்பு**

அடுத்த ஆண்டு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் கம்பு, மிளகாய் விலை நிலவரம் குறித்த முன்னறிவிப்பை, வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையம் வெளியிட்டுள்ளது.

இது குறித்து, வேளாண்மை துணை இயக்குநர் மு.சு.நா. செல்வராஜ் தெரிவித்துள்ளது: வறட்சியைத் தாங்கி வளரும் தானியங்களில் கம்பு முக்கியப் பயிராக உள்ளது. கடந்த 2013-14 ஆம் ஆண்டு தமிழகத்தில் 54,412 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்ட கம்பு, 1.17 லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டது. தூத்துக்குடி, மதுரை, தேனி, திருவண்ணாமலை, விருதுநகர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் கம்பு அதிக அளவில் பயிரிடப்படுகிறது. தற்போது, விழுப்புரம் சந்தையில் குவிண்டாலுக்கு ரூ.1550 வரை விற்பனை செய்யப்படுகிறது. கடந்த 15 ஆண்டுகளாக விழுப்புரம் சந்தையில் நிலவிய கம்பு விலையை ஆய்வு செய்ததில், 2016 பிப்ரவரி - மார்ச் மாதங்களில் குவிண்டாலுக்கு ரூ.1500-1600 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

மிளகாய் சாகுபடி: தேசிய அளவில் மிதமாகக் குறைந்துள்ள மிளகாய் உற்பத்தி மற்றும் அதிகரித்துள்ள ஏற்றுமதியின் காரணமாக, நிகழாண்டில் மிளகாய் விலை அதிகரித்துள்ளது. முண்டு மற்றும் சன்னம் ஆகியவை தமிழகத்தில் பயிரிடப்படும் முக்கிய மிளகாய் வகைகள். குறிப்பாக, சன்ன ரகம் மொத்த உற்பத்தியில் 80 சதவீதமாக உள்ளது.

பருவமழை மாற்றத்தினால் மத்திய பிரதேசத்தில் மிளகாய் உற்பத்தி குறைந்துள்ளது. நடப்பு பருவத்தில் எதிர்பார்க்கப்படும் மிதமான உற்பத்திக் குறைவு, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தையில் உள்ள தேவை போன்ற காரணங்களினால் மிளகாய்க்கு நல்ல விலை கிடைக்கும். தற்போது, தூத்துக்குடி சந்தையில் சன்ன மிளகாய் வற்றல் கிலோ ரூ.120 வரை விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த 18 ஆண்டுகளாக தூத்துக்குடி சந்தையில் நிலவிய சன்ன மிளகாய் விலையை ஆய்வு செய்ததில், 2016 பிப்ரவரி - மார்ச் மாதங்களில் சன்ன மிளகாய் விலை கிலோவுக்கு ரூ.85-90 வரை இருக்குமென கணிக்கப்பட்டுள்ளது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், கம்பு மற்றும் மிளகாய் விதைப்பு முடிவுகளை விவசாயிகள் எடுத்துக் கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

**"தானியங்களின் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை வேண்டும்'**

பருப்பு உள்ளிட்ட தானியங்களின் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கத்தின் ஆலோசனைக் கூட்டம், மாநகர் மாவட்டத் தலைவர் தங்கராசு சூலூரில் திங்கள்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

பருப்பு விலை உயர்வுக்கு காரணம் பெரு வியாபாரிகள் பருப்பை பதுக்கியதாக கூறுவது முற்றிலும் தவறானது. நாட்டின் மொத்த பருப்பு தேவை 250 லட்சம் டன் ஆனால் உள்நாட்டு உற்பத்தி 150 லட்சம் டன்கள் மட்டுமே. மத்திய, மாநில அரசுகள் பதுக்கலைக் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பது மட்டுமல்லாமல் பருப்பு உள்ளிட்ட தானிய உற்பத்தியை பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரிசியைக் கொள்முதல் செய்வதுபோல வேளாண் விஞ்ஞானி சுவாமிநாதன் அறிவுரைப்படி, விவசாயிகளிடம் பருப்பு வகைகளையும் அரசு கொள்முதல் செய்ய வேண்டும். பருப்பு உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க அனுமதிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பருப்பு விளைச்சல் குறைவு எதிரொலி: 15 அரவை ஆலைகள் மூடல்

பருப்பு விளைச்சல் குறைந்ததால் ஈரோடு மாவட்டத்தில் 15 அரவை ஆலைகள் மூடப்பட்டுள்ளன.

ஈரோடு மாவட்டத்தில் பொதுவாக 1,000 டன் துவரை பருப்பு விளையும். இந்த ஆண்டு 700 டன் பருப்பு மட்டும் தான் விளைந்துள்ளது. கீழ்பவானி, காலிங்கராயன் பாசனப் பகுதிகளில் 3,000 ஏக்கரில் துவரை பயிரிடப்படுகிறது.

கடந்த ஆண்டு துவரம் பருப்பு விளைச்சல் கடும் பாதிப்படைந்ததால் நாடு முழுவதும் பருப்பு விலை உயர்ந்துள்ளது. இதுவரை இல்லாத வகையில் ஒரு கிலோ பருப்பு ரூ. 225 வரை விலை உயர்ந்துள்ளது.

கார்ப்பரேட் நிறுவனங்கள் பருப்பு வகைகளை மொத்தமாக கொள்முதல் செய்து பதுக்கி வைத்ததாலும், பருப்பு அதிகமாக விளையக்கூடிய மகாராஷ்டிரம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் மழைப் பொழிவு குறைந்து போனதாலும் பருப்பு விளைச்சல் குறைந்துவிட்டதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

இதன் எதிரொலியாக, நாட்டின் பல பகுதிகளில் பருப்பு வகைகளை இருப்பு வைத்திருந்த கிடங்குகளில் அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தி பதுக்கி வைத்திருந்த பருப்புகளை கைப்பற்றி வருகின்றனர்.

ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 30 ஆலைகள் உள்ளன. கடந்த ஆண்டும், நடப்பாண்டிலும் ஈரோடு மாவட்டத்தில் பருப்பு விளைச்சல் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதால் ஈரோடு, பெருந்துறை, விஜயமங்கலம் போன்ற பகுதிகளில் இயங்கி வந்த 15-க்கும் மேற்பட்ட பருப்பு அரவை ஆலைகள் மூடப்பட்டுள்ளன.

இதுகுறித்து, பருப்பு அரவை ஆலைகள் உரிமையாளர்கள் கூறியதாவது:

தமிழகம் முழுவதும் ஆண்டுக்கு ஒருமுறை 2 ஆயிரம் டன் பருப்பு மட்டுமே விளைச்சல் ஆகிறது. மகாராஷ்டிரம், கர்நாடக மாநிலங்களில் இருந்து தான் தமிழகத்திற்கு பருப்பு வகைகள் அதிகளவில் வரும். கடந்த ஆண்டு இவ்விரு மாநிலங்களிலும் விளைச்சல் குறைந்து போனதால் பருப்பு விலை உயர்வைத் தவிர்க்க முடியவில்லை.

ஈரோடு மாவட்டத்திலும் கடந்த ஆண்டு பருப்பு சாகுபடி வெகுவாக குறைந்து போனதால் பருப்பு அரவை ஆலைக்கு கொண்டு வரப்படும் பருப்பு வகைகளின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துவிட்டது. இதன் காரணமாக, கடந்த 3 மாதங்களாகவே ஈரோடு மாவட்டத்தில் உள்ள பல பருப்பு அரவை ஆலைகள் மூடப்பட்டுவிட்டன.

தற்போது, ஓரிரு பருப்பு அரவை ஆலைகள் மட்டுமே இயங்கி வருகின்றன. பெரும்பாலான பருப்பு அரவை ஆலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் அரசு அதிகாரிகள் நடத்தி வரும் சோதனை காரணமாக ஒரு கிலோ பருப்பு விலை ரூ. 10 மட்டுமே குறைந்துள்ளது என்றார்.

## தேயிலை விவசாயிகளுக்குப் பயிற்சி முகாம்

குன்னூர் தேயிலை வாரியம் சார்பில், கொல்லிமலை ஓரநள்ளி கிராமத்தில் தேயிலை விவசாயிகளுக்கான சிறப்பு பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

தேயிலை வாரிய கூடுதல் செயல் இயக்குநர் பகலவன் வரவேற்றார்.

தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குநர் பால்ராஜ் தலைமை வகித்துப் பேசியதாவது:

தரமான பசுந்தேயிலைக்கு இன்றும் நல்ல விலை கிடைத்து வருகிறது. குறிப்பிட்ட காலத்தில் பசுந்தேயிலையை அறுவடை செய்து தொழிற்சாலைகளுக்கு விநியோகம் செய்ய முன்வர வேண்டும். தற்போது, தேயிலை வாரியம் சார்பில் ஒரே இலை ஒரே விலை என்ற நோக்கத்தில் அனைத்து விவசாயிகள், உற்பத்தியாளர்கள் ஒன்றிணைந்து செயல்படும் பட்சத்தில் தேயிலை தொழில் நல்ல நிலைக்கு உயரும் வாய்ப்புள்ளது என்றார். முகாமில், தேயிலை வாரிய வளர்ச்சி அலுவலர் செல்வி பிரபா, உபாசி வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் டாக்டர் ராமமூர்த்தி, உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் குறித்த ஆலோசனைக் கூட்டம்

ஆரணி நகரில் ரூ. 36.26 கோடி மதிப்பிலான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் குறித்த ஆலோசனைக் கூட்டம் நகராட்சி அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு நகர்மன்றத் தலைவர் க.ஆனந்தகுமாரி தலைமை வகித்தார். ஆணையர் ரவி, துணைத்தலைவர் தேவசேனாஆனந்தன், நகர்மன்ற உறுப்பினர்கள் ஆ.ந.ரமேஷ், செந்தில்வேல், ஜோதிலிங்கம், சரவணன், வி.டி.அரசு உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்த திட்டம் குறித்து குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக பொறியாளர் என்.சேகர் கூறியதாவது:

கடந்த 10-4-2013 அன்று சட்டப்பேரவையில் தமிழக முதல்வர் ஆரணி நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டத்துக்காக ரூ. 36.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்தார். இதன் அடிப்படையில் ஆற்காடு பாலாற்றிலிருந்து, ஆரணி நகருக்கு குடிநீர் கொண்டு வரும் பணிகள் தொடங்கியது. மேலும் ஆரணி நகராட்சியில் இதற்காக 7.4 லட்சம் லிட்டர் கொள்ளளவு

கொண்ட குடிநீர் தேக்கத்தொட்டி கட்டும் பணி, 2.6 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைத் தளத் தொட்டி கட்டும் பணி உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது 25 சதவீதப் பணிகள் மட்டுமே முடிந்துள்ளது என்றார். உதவி நிர்வாகப் பொறியாளர் டி.குணசேகரன், உதவிப் பொறியாளர் சிதம்பரம், இளநிலைப் பொறியாளர் ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**மழை எதிரொலி: மீனவர்களுக்கு எச்சரிக்கை**

மழை அறிவிப்பு எதிரொலியாக மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியின் கடலோர மாவட்டங்களில் 2 நாள்களுக்கு மழை நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தென்மேற்கு வங்கக் கடலில் இலங்கை கடற்கரையை ஒட்டி காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக தமிழகம், புதுச்சேரி, ஆந்திரம், கேரளம் உள்ளிட்ட பகுதிகளில் வரும் 28-ம் தேதி வடகிழக்கு பருவமழை தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளதால் திங்கள்கிழமை முதல் கடலோர மாவட்டங்களில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் தமிழகம், புதுச்சேரி, ஆந்திர மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், தமிழகம் மற்றும் புதுச்சேரியின் கடலோர மாவட்டங்களில் 2 நாள்களுக்கு மழை நீடிக்கும் எனவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**பிசான சாகுபடிக்கு பாபநாசம் அணை நவ. 5இல் திறப்பு?**

தாமிரவருணி பாசனத்தில் பிசான பருவ சாகுபடிக்கு பாபநாசம், சேர்வலாறு அணைகளில் இருந்து வரும் நவ. 5ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படும் என பொதுப்பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

தாமிரவருணி பாசனத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் கார் பருவ அறுவடை நடைபெற்று வருகிறது. பல இடங்களில் தாமதமாக நடவு செய்ததால் அறுவடை செய்வதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே, பிசான பருவ சாகுபடி பணிகளைத் தொடங்க விவசாயிகள் தயாராகி வருகின்றனர். செப்டம்பர் மாதத்தில் அறுவடை முடிந்த பகுதியில் விவசாயிகள் தற்போது நாற்று பாவும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பிசான பருவ சாகுபடி பணிகளுக்காக பாபநாசம், சேர்வலாறு அணைகளிலிருந்து தண்ணீர் திறக்கும் வகையில் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே, வரும் நவ. 5ஆம் தேதி பாசனத்துக்கு அணைகளிலிருந்து தண்ணீர் திறக்க வாய்ப்புள்ளதாக பொதுப்பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

நீர்வரத்து அதிகரிப்பு: மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்துவரும் மழையால் அணைகளின் நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. திங்கள்கிழமை காலை நிலவரப்படி நம்பியாறு அணையில் 50 மி.மீ. மழை பதிவாகியிருந்தது. அணைக்கு 50.56 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 12.30 அடியாக இருந்தது.

பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 900 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 436 கனஅடியும், கடனாநதி அணைக்கு 100 கனஅடியும், ராமநதி அணைக்கு 41 கனஅடியும், கருப்பாநதி அணைக்கு 61 கனஅடியும், அடவிநயினார் அணைக்கு 57 கனஅடியும், கொடுமுடியாறு அணைக்கு 60 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

நீர்மட்டம் உயர்வு: பாபநாசம் அணையின் நீர்மட்டம் ஓரடி உயர்ந்து 69.70 அடி, சேர்வலாறு அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 83.33 அடி, மணிமுத்தாறு அணை நீர்மட்டம் ஓரடி உயர்ந்து 61.60 அடி, கடனாநதி அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 54 அடி, ராமநதி அணை நீர்மட்டம் ஓரடி உயர்ந்து 54 அடி, கருப்பாநதி அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 57.09 அடி, அடவிநயினார் அணை நீர்மட்டம் 2.25 அடி உயர்ந்து 83.25 அடியாக இருந்தது.

**அரியலூர் மாவட்டத்தில் வேளாண் வளர்ச்சிப் பணிகள் ஆய்வு**

அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் வேளாண் வளர்ச்சிப் பணிகளை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் பன்னீர்செல்வம் ஆய்வு செய்தார்.

அரியலூர் வட்டாரத்தில் தேளூர் கிராமத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பசுமை உயிரியல் காரணிகள் உற்பத்தி மைய செயல்பாட்டை ஆய்வு செய்து அவர்களுக்கு டிரைகோடெர்மாவிரீடி உயிரியல் பூஞ்ஞான மருந்து 75 கிலோவை வேளாண் இணை இயக்குநர் வழங்கினார். தொடர்ந்து, நாகமங்கலம் கிராமத்தில் கரும்பு தோகைகளை தூளாக்கி மக்கிய நிலையில் அங்கக உரமிட்ட விவசாயிகளுடன் கலந்துரையாடினார். அதைத்தொடர்ந்து, அஸ்தினாபுரம் கிராமத்தில் நிலக்கடலை விதைக்கும் கருவி கொண்டு, விதைக்கப்பட்டு 90 நாட்கள் வயதுடைய விதைப்பண்ணை வயலை வேளாண் இணை இயக்குநர் பன்னீர்செல்வம் பார்வையிட்டு, விவசாயிகளுக்கு அத்திட்டம் தொடர்பான ஆலோசனைகளை வழங்கினார்.

இதையடுத்து, செந்துறை வட்டாரம் உஞ்சினி கிராமத்தில் நாற்றுவிட்டு நடவுசெய்துள்ள ஆதாரநிலை துவரை விதைப் பண்ணையை அவர் பார்வையிட்டார். பிறகு நடவு செய்த 30-வது நாள் நுணிகளை கிள்ளிவிடவும் மற்றும் பூவைக்கும் தருணத்தில் 2% டிஏபி கரைசலை தெளிக்கவும் விவசாயிகளுக்கு அறிவுறுத்தினார்.

நந்தியன்குடிக்காடு கிராமத்தில் முதிர்ச்சி நிலையில் உள்ள கோ -2 குதிரைவாலி வயல்வெளிகளை ஆய்வு செய்த பன்னீர்செல்வம், இதுகுறித்து அப்பகுதி மக்களிடம் கூறியதாவது:

செந்துறை வட்டாரத்தில் நடப்பு சம்பா பருவ விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்ட நெல் இயக்கத்தின் கீழ், இயந்திர நடவுப் பணிக்காக ஒரு ஹெக்டருக்கு ரூ. 3 ஆயிரம் வீதம் அரசு மானியம் வழங்கப்படுகிறது. இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், சிறுதானிய பயிர்களைப் பயிரிட்டு நல்ல லாபத்தையும், நல்ல உடல்நலத்தையும் பெறலாம் என்றார்.

இதேபோல, தளவாய், பெரியாக்குறிச்சி ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் வேளாண் வளர்ச்சி திட்டங்களை வேளாண் இணை இயக்குநர் ஆய்வு மேற்கொண்டார்.வேளாண் அலுவலர்கள் அரியலூர் ராஜேந்திரன், செந்துறை துணை வேளாண்மை அலுவலர் துரைராசு, அரியலூர் உதவி வேளாண்மை அலுவலர்கள் கொளஞ்சி, வேல்முருகன், மேகநாதன், அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார், உதவி வேளாண் அலுவலர்கள் ஆனந்தி, மலர்கொடி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### அக்.30-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

அரியலூர் மாவட்ட ஆட்சியரகக் கூட்ட அரங்கில் வரும் 30 ஆம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியரகம் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளது: அக். 30-ம் தேதி காலை 10 மணிக்கு மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் தலைமையில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் தங்கள் விவசாயம் சார்ந்த குறைகளை தெரிவிக்கலாம்.

### நாட்டுக் கோழிகளுக்கு தீவனம் தயாரிக்க இலவச பயிற்சி

நாட்டுக்கோழிகளில் முட்டை, இறைச்சி உற்பத்திக்கு சொந்தமாகத் தீவனம் தயாரிக்கும் முறைகள் குறித்து ஒரு நாள் இலவசப் பயிற்சி முகாம் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் நவம்பர் 2-ஆம் தேதி காலை 9 மணிக்கு நடைபெறுகிறது. பயிற்சி ஒருங்கிணைப்பாளர் பி.மோகன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:இப் பயிற்சியில் நாட்டுக்கோழி ரகங்கள், வளர்ப்பு முறைகள், தீவன அளவுகள், குஞ்சு பொரிக்கும் விதம், தீவன மேலாண்மை, முட்டை, இறைச்சி உற்பத்திக்குச் சொந்தமாக தீவனம் தயாரிக்கும் முறைகள் குறித்த பயிற்சி விரிவாக அளிக்கப்படுகிறது.இம் முகாமில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள், ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்தோ அல்லது 04286 - 266345, 266244 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு வரும் 31-ஆம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## விவசாயத்தில் முன்மாதிரி: அமெரிக்காவில், இந்திய பெண்ணுக்கு உயரிய விருது



ஹூஸ்டன்

அமெரிக்காவின் புரூக்ளின் பகுதியில் சமூக சேவை புரிந்து வந்தவர் அனிதா அடல்ஜா. இந்திய வம்சாவளி பெண்மணியான இவர், பின்னர் விவசாயத்தில் ஈடுபட்டார். இதற்காக ஆர்காடியா மையம் என்ற பெயரில் உணவு மற்றும் விவசாய நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறார்.

நவீன முறையில் விவசாயத்தில் ஈடுபட்டு வரும் அனிதா அடல்ஜா, மண்வளம் மற்றும் நீர்வள மேம்பாடு, பசுமைக்கூட வாயு குறைப்பு உள்ளிட்ட பல்வேறு முன்மாதிரி பணிகளை மேற்கொண்டார். இதனால் 'மாற்றத்துக்கான சாதனையாளர்' என்ற உயரிய விருதுக்கு, வெள்ளை மாளிகை இவரை தேர்ந்தெடுத்தது.

விவசாயத்தில் சாதனை புரிந்த மேலும் 11 பேர் இந்த விருதுக்காக தேர்வு செய்யப்பட்டு, இவர்களுக்கான விருது நேற்று இரவு வழங்கப்பட்டது. விருது பெற்ற அனிதா அடல்ஜா, ஜிப்சோனியா, பா, வாஷிங்டன் உள்ளிட்ட இடங்களிலும் விவசாய பணிகளை மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## தென் கிழக்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை இன்று மாலை முதல் அநேக இடங்களில் மழை பெய்யும் என வானிலை அறிவிப்பு




சென்னை,

தென் கிழக்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் அநேக இடங்களில் இன்று (செவ்வாய்க்கிழமை) மாலை முதல் மழை பெய்யும் என்றும் வடகிழக்கு பருவமழை நாளை தொடங்கும் என்றும் வானிலை மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை சராசரியாக அக்டோபர் மாதம் 20-ந்தேதி தொடங்கும். கடந்த வருடம் 20-ந்தேதிக்கு முன்பே தொடங்கி விட்டது.

ஆனால் இந்த வருடம் இதுவரை வடகிழக்கு பருவமழை தொடங்கவில்லை. இந்த நிலையில் நாளை(28-ந்தேதி) வடகிழக்கு பருவமழை தொடங்கும் என்றும், தென் கிழக்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகும் என்றும் கடந்த சில நாட்களுக்கு முன்பு வானிலை மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் அறிவித்தார். அவர் அறிவித்தபடி தென் கிழக்கு வங்கக்கடலில், இலங்கை அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. அரபிக்கடலிலும் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி இருக்கிறது. இது குறித்து வானிலை ஆராய்ச்சி மண்டல இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:-

நான் ஏற்கனவே அறிவித்தபடி தென் மேற்கு வங்கக்கடலில் இலங்கை அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் இன்று (செவ்வாய்க்கிழமை) மாலை முதல் கடலோர மாவட்டங்களில் அநேக இடங்களில் மழை பெய்யும். உள் மாவட்டங்களிலும் அநேக இடங்களில் மழை பெய்யும். வடகிழக்கு பருவமழை நாளை(புதன்கிழமை) தொடங்க உள்ளது. இப்போதைய நிலவரப்படி தமிழ்நாட்டில் 3 நாட்களுக்கு தொடர்ந்து மழை பெய்யும். இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-

ராமேசுவரம்

ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்திலும், ஈரோடு மாவட்டம் கோபிச் செட்டிப் பாளையத்திலும் தலா 2 செ.மீ. மழை பெய்துள்ளது. திருவள்ளூர் மாவட்டம் தாமரைப்பாக்கம், திருச்சி மாவட்டம் சமயபுரம், கன்னியாகுமரி மாவட்டம் மைலாடி, தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் திருச்சி நகர்புறம் ஆகிய இடங்களில் தலா 1 செ.மீ.மழை பெய்துள்ளது.

மீனவர்களுக்கு எச்சரிக்கை

குறைந்த காற்றழுத்த தாழ்வு காரணமாக தமிழக கடலோர மாவட்டங்கள், அந்தமான், லட்சத்தீவு பகுதியில் கனமழை பெய்யும் என்று வானிலை மையம் தெரிவித்து உள்ளது. அப்போது பலத்த காற்று வீசும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதனால் இன்று (செவ்வாய்க்கிழமை) முதல் 30-ந்தேதி வரை 4 நாட்கள் தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா ஆகிய மாநிலங்களில் உள்ள கடல் பகுதிகளில் மீனவர்கள் யாரும் மீன் பிடிக்கச்செல்லவேண்டாம் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

**சுல்தான்பேட்டை பகுதியில் வாழை சாகுபடியில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்**



சுல்தான்பேட்டை

சுல்தான்பேட்டை பகுதியில் வாழை சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்ட தொடங்கி உள்ளனர்.

சுல்தான்பேட்டை

சுல்தான்பேட்டை மற்றும் அதன்சுற்றுவட்டார பகுதிகளான செஞ்சேரிமலை, பூராண்டாம்பாளையம், தாளக்கரை, வதம்பச்சேரி, ஜல்லிபட்டி, கம்மாளப்பட்டி, தளக்கரிச்சல், பாம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் காய்கறி விவசாயம் நடைபெறுகிறது.

இந்த நிலையில், போதிய மழை இல்லாமை, உரங்களின் விலை உயர்வு, ஆட்கள் பற்றாக்குறை உள்பட பல்வேறு காரணங்களால் நாளுக்கு நாள் விவசாயம் குறைந்து வருகிறது. ஆனால் வாழை விவசாயத்தில் போதிய வருவாய் கிடைப்பதால் ஏராளமான விவசாயிகள் வாழை சாகுபடியில் கவனம் செலுத்த தொடங்கி உள்ளனர்.

வாழை விவசாயம்

கடந்த காலங்களில் சுமார் 300 ஏக்கரில் பயிரிடப்பட்டு இருந்த வாழை விவசாயம் தற்போது 500 ஏக்கரில் பயிரிடப்பட்டு வருகிறது. இந்த வாழைகள் பெரும்பாலும் பி.ஏ.பி. பாசன வசதி பெறும் இடங்களிலும், தண்ணீர் வசதி உள்ள இடங்களிலும் பயிரிடப்பட்டு வருகிறது.

இதுகுறித்து விவசாயி பழனிச்சாமி கூறியதாவது:- சுல்தான்பேட்டை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் தக்காளி, வெங்காயம், வெண்டைக்காய், பாகற்காய் உள்ளிட்ட காய்கறிகளே அதிகளவில் பயிரிடப்பட்டு வந்தன. தற்போது காய்கறிகளுக்கு போதிய விலை கிடைப்பது இல்லை. மேலும், அறுவடையின் போது தொழிலாளர்கள் பற்றாக்குறை காரணமாக காய்கறிகளை பறிக்காமல் செடியில்

விட்டுவிடுவோம். இதனால் எங்களுக்கு போதிய வருவாய் கிடைப்பது இல்லை.

ஊடுபயிர்

இதன்காரணமாக நேந்திரம், கதளி, செவ்வாழை, கற்பூரவள்ளி ஆகியவற்றை நாங்கள் அதிகளவில் நடவு செய்து உள்ளோம். 11 மாதம் முதல் 12 மாத பயிரான வாழையை கோவை, திருப்பூர் மற்றும் கேரள வியாபாரிகள் வாழை தோட்டங்களில் வந்து அதனை வெட்டி செல்கிறார்கள். இதனால் எங்களுக்கு போக்குவரத்து செலவு மற்றும் தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இதேபோல் வாழை தோட்டங்களில் ஊடுபயிராக கொத்தமல்லி, கீரை ஆகியவற்றை பயிரிடுவதின் மூலம் எங்களுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கிறது.வாழை பயிரிடும் போது கூடுதலாக தண்ணீர் தேவைப்படும். மற்றபடி காய்கறிகளை போன்று அதிக கவனம் செலுத்தி பராமரிக்க வேண்டியதில்லை. ஆனால் பலத்த காற்று வீசும்போது வாழைகள் சரிந்து விழாமல் இருக்க சவுக்கு கம்புகளை முட்டுக்கொடுக்க வேண்டிய நிலை உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## விலை உயர்வு எதிரொலி: கறிக்கோழி உற்பத்தியை அதிகரிக்க பண்ணை உரிமையாளர்கள் முடிவு



பொள்ளாச்சி

விலை உயர்வு காரணமாக கறிக்கோழி உற்பத்தியை 10 சதவீதம் அதிகரிக்க பண்ணை உரிமையாளர்கள் முடிவு செய்து உள்ளனர்.

<u>கறிக்கோழி பண்ணைகள்</u>

தமிழகத்தில் பல்லடம், பொங்கலூர், நாமக்கல், ஈரோடு உள்பட பல்வேறு இடங்களில் 25 ஆயிரம் கறிக்கோழி உற்பத்தி பண்ணைகள் உள்ளன. இங்கு தினமும் 8 லட்சம் கறிக்கோழிகள் உற்பத்தி செய்யப்பட்டு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் ஆந்திரா, கர்நாடகா, கேரளா உள்ளிட்ட மாநிலங்களுக்கும் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன.

பண்ணை கொள்முதல் விலை பல்லடத்தில் உள்ள கறிக்கோழி ஒருங்கிணைப்புக்குழு (பி.சி.சி.) சார்பில் தினமும் நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. கடந்த மாதம் புரட்டாசி என்பதால் கறிக்கோழியின் நுகர்வு வெகுவாக குறைந்து இருந்தது. இதன் எதிரொலியாக கறிக்கோழி விற்பனை மந்தமாகி, பண்ணை கொள்முதல் விலை வீழ்ச்சி அடைந்தது.

விலை உயர்வு

ஒரு கிலோ கறிக்கோழி உற்பத்திக்கு ரூ.68 முதல் ரூ.70 வரை உற்பத்தியாளர்களுக்கு செலவாகிறது. ஆனால் நுகர்வு சரிவின் காரணமாக கடந்த 15–ந் தேதி ஒரு கிலோ கறிக்கோழி பண்ணை கொள்முதல் விலை ரூ.55 என்று இருந்தது. இதனால் உற்பத்தியாளர்களுக்கு கிலோ ரூ.15 வரை நஷ்டம் அடைந்தனர்.

இந்த நிலையில், கடந்த 18–ந் தேதி ஐப்பசி மாதம் தொடங்கியது. இதையடுத்து, அசைவம் சாப்பிடுவதை கைவிட்டவர்கள் தற்போது மீண்டும் அசைவத்திற்கு மாறியுள்ளனர். இதனால் கடந்த 15–ந் தேதி ரூ.55 ஆக இருந்த பண்ணை கொள்முதல் விலை 16–ந் தேதி ரூ.58 என்றும், 17–ந் தேதி ரூ.65 என்றும் விலை உயர்ந்தது. பின்னர் படிப்படியாக விலை உயர்ந்து தற்போது கிலோ ரூ.80–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

உற்பத்தியை அதிகரிக்க முடிவு

இதன்படி கடந்த 10 நாட்களில் பண்ணைக்கொள்முதல் விலை கிலோவுக்கு ரூ.25 உயர்ந்து உள்ளது. இதனால் கிலோவுக்கு ரூ.13 முதல் ரூ.15 வரை உற்பத்தியாளர்களுக்கு லாபம் கிடைத்து வருகிறது. தொடர் நஷ்டத்தில் சந்தித்து வந்த கறிக்கோழி உற்பத்தியாளர்கள் தற்போது விலை உயர்வு காரணமாக மகிழ்ச்சி அடைந்து வருகிறார்கள்.

புரட்டாசி மாதம் விலை சரிவின் காரணமாக கறிக்கோழி உற்பத்தியாளர்கள் 20 சதவீதம் உற்பத்தியை குறைத்து இருந்தனர். இந்த நிலையில் கடந்த ஒரு வாரமாக நுகர்வு அதிகரிப்பு, விலை உயர்வு உள்பட பல்வேறு காரணங்களால் 10 சதவீத உற்பத்தியை அதிகரிக்க கறிக்கோழி பண்ணை உற்பத்தியாளர்கள் முடிவு செய்து உள்ளனர்.

**காவிரியில் தண்ணீர் கிடைக்காமல் சம்பா பயிர் கருகினால் ரூ. 10,000 கோடி நஷ்டம்**




சென்னை: தமிழ் மாநில காங்கிரஸ் விவசாய பிரிவின் மாநில தலைவர் புலியூர் நாகராஜன் மற்றும் நிர்வாகிகள் நேற்று தலைமை செயலகத்தில் முதல்வரின் தனி பிரிவில் மனு அளித்தனர். அதில் கூறி இருப்பதாவது: கடந்த 4 ஆண்டுகளாக மேட்டூர் அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால் டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி நடக்கவில்லை. இந்த ஆண்டும் டெல்டா பகுதியில் 15 லட்சம் ஏக்கருக்கு மேலாக சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேட்டூர் அணையில் 60 அடி மட்டுமே தண்ணீர் உள்ளது. ஜனவரி 28ம் தேதி வரை மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட்டால் மட்டுமே சம்பா பயிரை காப்பாற்ற முடியும். தற்போதுள்ள தண்ணீர் வைத்து

இன்னும் ஒரு சில வாரங்கள் மட்டுமே தண்ணீர் வழங்க முடியும். காவிரி விஷயத்தில் மத்திய அரசு அக்கறை இல்லாமல் நடந்து வருகிறது. சம்பா பயிர் சாகுபடி முழுமையாக நடைபெறாவிட்டால் தமிழகத்தில் உணவு பஞ்சம் ஏற்படும். விவசாயிகளுக்கு ரூ. 10 ஆயிரம் கோடி நஷ்டம் ஏற்படும். கர்நாடக அரசு நடுவர் மன்ற தீர்ப்பின்படி 192 டிஎம்சி தண்ணீர் தமிழகத்திற்கு தர வேண்டும். ஆனால் இந்த ஆண்டில் இதுவரை 68 டிஎம்சி தண்ணீர் மட்டுமே திறந்து விட்டுள்ளது. மீதமுள்ள தண்ணீரை பெற மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறியுள்ளனர்.

**நாளை முதல் வடகிழக்கு பருவமழை தீவிரம்**




சென்னை: தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை நாளை முதல் தீவிரம் அடையும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென் மேற்கு பருவமழை கடந்த 20ம் தேதி முதல் முடிவுக்கு வந்ததை அடுத்து தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளது. தமிழகம் புதுச்சேரியில் கடந்த ஒரு வாரமாக பரவலாக மழை ெபய்து வருகிறது. அதிகபட்சமாக நேற்று ராமேஸ்வரம், கோசெட்டிப் பாளையத்தில் 20 மிமீ மழை பெய்துள்ளது. தாமரைப்பாக்கம், சமயபுரம், பாப்பிரெட்டிபட்டி

ஆகிய பகுதிகளில் 10 மிமீ மழை பெய்துள்ளது. இந்நிலையில், வங்கக் கடலில் தென்கிழக்கு பகுதியில் இலங்கையை ஒட்டிய கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இது வடமேற்கு திசையில் நகர்ந்து வருவதால், நாளை முதல் தமிழகம், புதுச்சேரியில் வடகிழக்கு பருவமழை தீவிரமாக பெய்யும். சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் லேசானது முதல் கனமழை பெய்யும். பிற மாவட்டங்களில் மிதமான மழை பெய்யும்.

பருவமழை தொடங்க உள்ளதை அடுத்து வெள்ள அபாயங்களை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழகம் முழுவதும் உள்ளாட்சி அமைப்புகள் உஷார்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு மாவட்டங்களில் பொதுமக்கள் அறியும் வகையில் மைக் மூலம் அறிவிப்புகள் செய்யப்பட்டு வருகின்றன. தாழ்வான பகுதிகளில் குடியிருப்போர் பாதுகாப்பான இடங்களுக்கு செல்வதற்கான நடவடிக்கையும் எடுக்கவும், வெள்ள தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அரசு தெரிவித்துள்ளது.

**முட்டை விலை 329 காசாக உயர்வு**



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 329 காசாக உயர்த்தப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நேற்று நடைபெற்ற தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழுவின் விலை நிர்ணய குழு கூட்டத்தில் 327 காசாக இருந்த முட்டையின் விலை 2 காசு உயர்த்தப்பட்டு 329 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல் மண்டலத்தில் கடந்த இரண்டு வாரமாக முட்டை விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.புரட்டாசி மாதம் நிறைவடைந்ததை தொடர்ந்து விற்பனை அதிகரிப்பால் முட்டை விலை உயர்ந்து வருகிறது. கடந்த 15ம் தேதி முட்டை விலை 307 காசுகளாக இருந்தது. பின்னர் படிப்படியாக உயர்ந்து தற்போது 329 காசுகளை எட்டியுள்ளது. பிறமண்டலத்தின் முட்டை விலை (காசுகளில்): பெங்களூரு- 337, மைசூர்- 344, ஐதராபாத் -301, மும்பை- 340, விஜயவாடா- 300, கொல்கத்தா- 335, டெல்லி 317 காசுகள். ஒரு கிலோ முட்டைக்கோழி விலை ரூ. 64. கறிக்கோழி விலை ரூ.80 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**பருப்பு விளைச்சல் குறைவால் 10 அரவை மில்களுக்கு பூட்டு**



ஈரோடு: பருப்பு விளைச்சல் கடும் பாதிப்படைந்ததால் நாடு முழுவதும் துவரம் பருப்பு விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. வரலாறு காணாத

வகையில் ஒரு கிலோ பருப்பு ரூ.250 வரை விற்றது. ஈரோடு மாவட்டத்தை பொறுத்தவரையிலும் கடந்த ஆண்டும், நடப்பாண்டிலும் பருப்பு விளைச்சல் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதால் ஈரோடு, பெருந்துறை, விஜயமங்கலம் பகுதிகளில் இயங்கி வந்த 15க்கும் மேற்பட்ட பருப்பு அரவை மில் மூடப்பட்டுள்ளன. இதுகுறித்து பருப்பு அரவை மில் உரிமையாளர்கள் கூறியதாவது: தமிழகம் முழுவதும் ஆண்டொன்றுக்கு 2 ஆயிரம் டன் பருப்பு மட்டுமே விளைச்சல் ஆகிறது. மகாராஷ்டிரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்து தான் தமிழகத்திற்கு பருப்பு அதிகளவில் வரும். கடந்த ஆண்டு இவ்விரு மாநிலங்களிலும் இருந்து பருப்பு வரத்து குறைந்ததால் விலை உயர்வை தவிர்க்க முடியவில்லை. ஈரோடு மாவட்டத்திலும் கடந்த ஆண்டு பருப்பு சாகுபடி வெகுவாக குறைந்து போனதால் பருப்பு அரவை மில்லுக்கு கொண்டு வரப்படும் பருப்பு வகைகளின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து விட்டது. இதன் காரணமாக கடந்த 3 மாதங்களாகவே ஈரோடு மாவட்டத்திலுள்ள பல பருப்பு அரவை மில்கள் மூடப்பட்டு விட்டன. தற்போது ஓரிரு பருப்பு அரவை மில்லை தவிர 10க்கும் மேற்பட்ட பருப்பு அரவை மில்கள் மூடப்பட்டு விட்டது. பெரும்பாலான பருப்பு அரவை மில்கள் மூடப்பட்டுள்ள நிலையில் சமீபத்தில் அரசு நடத்திய ரெய்டின் பலனாக ஒரு கிலோ பருப்பு விலை ரூ.10 மட்டுமே குறைந்துள்ளது. மத்திய, மாநில அரசு அதிகாரிகள் நடத்திய ரெய்டுக்கு முன்பு ரூ.200க்கு விற்ற துவரம்பருப்பின் விலை ரூ.10 மட்டும் குறைந்து தற்போது ரூ.190க்கு விற்கிறது. இவ்வாறு பருப்பு மில் உரிமையாளர்கள் தெரிவித்தனர். தட்டைப்பயறு, அவரை விற்பனை அதிகரிப்பு துவரம் பருப்பின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் அதற்கு மாற்றாக தட்டைப்பயறு, அவரை பருப்பு ஆகியவற்றை சமீபகாலமாக மக்கள் பயன்படுத்த துவங்கியுள்ளனர். இவ்விரு பருப்புகளும் கிலோ

₹80க்கு தான் விற்கப்படுகிறது. அந்தியூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, பவானி போன்ற பகுதிகளில் விளையக்கூடிய தட்டைப்பயிறு மற்றும் அவரைப்பருப்பு வகைகளை முன்பு கிராமப்பகுதிகளை சேர்ந்த மக்களே அதிகம் பயன்படுத்தி வந்தனர். துவரம்பருப்புக்கு நிகரான ருசியும், மணமும் உள்ளதால் தட்டைப்பயறு மற்றும் அவரைப்பருப்பு வகைகளை தற்போது நகர்ப்புற மக்களும் அதிகமாக பயன்படுத்த துவங்கியுள்ளதாக பருப்பு வியாபாரிகள் கூறுகின்றனர்

**சாகுபடி செய்யும் முன் மண்பரிசோதனை மிகஅவசியம்**

விருதுநகர், : மண் பரிசோதனை செய்து அதில் உள்ள வளங்களை தெரிந்து கொண்டு அதற்கேற்ப பயிர்களை சாகுபடி செய்தால் எதிர்பார்ப்புக்கு அதிகமாக விவசாயிகள் லாபம் பெறலாம் என வேளாண்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.இதுகுறித்து அவர்கள் மேலும் கூறியிருப்பதாவது:மண் மாதிரி ஆய்வுக்கு அரை கிலோ மண் தேவைப்படும். அந்த மண் சாகுபடி செய்யப்படும் நிலத்திற்கு உகந்ததாக இருந்தால் அதற்கேற்ற பயிர்களை விதைக்கலாம். இந்த ஆய்வானது ஒவ்வொருமுறை பயிரிடும்போதும் விவசாயிகள் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். ஒரு பயிர் அறுவடை செய்தவுடன் அடுத்த பயிருக்கு நிலத்தை தயார்செய்யும் இடைபட்ட காலத்தில் இந்த மண்மாதிரி பரிசோதனையை விவசாயிகள் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். நிலத்தின் ஒவ்வொரு பகுதியிலும் மண் வெவ்வேறு நிறங்களில் இருந்தால் அந்தந்த மண்களை தனியாக எடுத்து பரிசோதனைக்கு அனுப்பி வைக்க வேண்டும். எரு குவித்த இடம், வரப்பு வாய்க்கால் மற்றும் மர நிழல் அருகில் உள்ள மண்ணை மாதிரி பரிசோதனைக்காக எடுத்து வரக்கூடாது. ஒவ்வொரு வயலுக்கும் தனித்தனி மாதிரிகளை கடைபிடிக்க வேண்டும். மண்மாதிரி எடுக்கப்படும் இடத்திலுள்ள இலை, சருகு, புல், ஆகியவற்றை மேல்மண்ணை செதுக்காமல் அப்புறப்படுத்த வேண்டும். நெல், கேழ்வரகு போன்ற தானியப்பயிர்கள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகளுக்கு அரை அடி ஆழமும், கரும்பு, பருத்தி, வாழை, காய்கறி பயிர்களுக்கு முக்கால்

அடியும், தென்னைக்கு 3 அடியும், மா, சப்போட்டா போன்ற பழ மரங்களுக்கு 6 அடி ஆழத்தில் குழி வெட்டி அடுக்கு வாரியாக தனித்தனியாக மண் மாதிரி எடுக்க வேண்டும்.காலப்பயிர்களுக்கு ‘வி’ வடிவில் குழி வெட்ட வேண்டும். வெட்டிய குழியின் இரு ஓரங்களிலும் மண்வெட்டியின் தகட்டால் மேலிருந்து கீழ் வரை 1 சென்டிமீட்டர் கனத்திற்கு சீராக மண்ணை சுரண்டி எடுத்து சேகரிக்க வேண்டும். இதேபோல் 1 ஏக்கருக்கு 10 முதல் 15 இடங்களில் மண் சேகரித்து அதை சுத்தமான பிளாஸ்டிக் பை அல்லது சாக்கில் கொட்டி, நன்றாக கலந்து கல், கண்ணாடி, வேர் தண்டுகளை அப்புறப்படுத்த வேண்டும். பின்பு, நான்கு சம போக முறையில் அரைக்கிலோ மண்ணை எடுத்து துணிப்பையில் போட்டு கட்ட வேண்டும். மண் மாதிரியுடன் விவசாயி பெயர் மற்றும் அஞ்சல் முகவரி, கிராமத்தின் பெயர், நிலத்தின் பெயர், இறவை அல்லது மானாவாரி, பயிரிடப்படுவதற்கு முந்தைய பயிரின் விபரம், அடுத்து பயிரிடப் போகும் பயிரின் விபரம் அனைத்தையும் தெரிவிக்க வேண்டும். மேலும் தகவல்களுக்கு அருகில் உள்ள வேளாண்துறை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம் என வேளாண்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

**சூரிய சக்தி பம்புசெட் அமைக்க வேளாண் பொறியியல் துறையை விவசாயிகள் அணுகலாம்**

விருதுநகர், : சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட் அமைக்க விவசாயிகள் வேளாண் பொறியியல் துறையை அணுகலாம் என வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.விவசாயிகள் தங்களது வேளாண்நிலங்களில் சூரிய மின்சக்தி பேனல்கள், ஆழ்துளை கிணற்றில் சோலார் பம்புசெட்டுகள் அமைக்க, திறந்த வெளிகிணறு, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளிலும் சோலார் பம்பு செட்டுகள் அமைக்க 80 சதவீத மானியத்தில் அமைத்துக் கொடுக்கப்படுகிறது. அடிப்படை விலையில் 80 சதவீத மானியம் போக 20 சதவீத தொகை மற்றும் வரியை

விவசாயிகள் செலுத்தனால் போதுமானது. ரூ.3.99 லட்சம் மதிப்பிலான நிலையான பேனல்களுக்கு விவசாயிகள் ரூ.95 ஆயிரம் செலுத்தினால் போதுமானது.

திறந்த வெளி கிணறுகளில் ரூ.5.02 லட்சம் மதிப்பிலான பம்பு செட்டுகள் அமைக்க விவசாயிகள் 1.17 லட்சம் கட்டினால் போதுமானது. விருப்பம் உள்ள விவசாயிகள் வேளாண் பொறியியல் துறையை அணுகி கம்ப்யூட்டர் பட்டா அசல், அடங்கல் பட்டா, விசைக்குழாய் அமையும் இட நில வரைபடம், குடும்ப அட்டை நகல், பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள் 2, சாதிச்சான்று நகல் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கலாம். விவசாயிகள் சூரிய ஒளி விசைக்குழாயை வேளாண் உபயோகத்திற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும். விருதுநகர் மாவட்டத்தில் இதுவரை தானாக இயங்கும் பேனல்கள் மூலம் 21 விவசாயிகள் ஆழ்குழாய் கிணற்றிலும், 39 விவசாயிகள் திறந்தவெளி கிணற்றிலும், 2 விவசாயிகள் தரைமட்ட தொட்டியிலும் ஆக மொத்தம் 62 விவசாயிகள் சோலர் பம்பு செட்டுகளை அமைத்துள்ளனர். சோலர் பம்பு செட் அமைக்க விரும்பு விவசாயிகள் விருதுநகர் கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள வேளாண் பொறியியல் துறையை அணுகி பயன்பெறலாம் என தெரிவித்துள்ளனர்.

**நீடாமங்கலத்தில் விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிக்கும் பயிற்சி**

நீடாமங்கலம், : நீடாமங்கலத்தில் நடந்த மண்புழு உரம் தயாரிக்கும் பயிற்சியில் 40 விவசாயிகள் கலந்து ெகாண்டு பயிற்சி பெற்றனர். திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மண்புழு உரம் தயாரித்தல் பயிற்சி நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பாஸ்கரன் தலைமையில் நடந்தது. பாஸ்கரன் பேசுகையில், மண்புழு உரம் இயற்கை விவசாயத்திற்கு ஏற்ற உரம். சுற்றுச்சூழலுக்கு எவ்வித தீங்கும் விளைவிக்காமல் நன்மை செய்யும் உயிரினங்களை பாதுகாக்கிறது. விவசாயிகள் இதை உற்பத்தி செய்து வயல்களுக்கு பயன்படுத்திகொள்வதோடு மட்டுமல்லாமல் அதனை

விற்பனை செய்வதன் வாயிலாக அதிக வருவாய் தரும் லாபகரமான தொழிலாகவும் செய்ய முடியும் என்றார். முனைவர் காமராஜ், உதவி பேராசிரியர்கள் சிவக்குமார், கவிதாஸ்ரீ மற்றும் திருவாரூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் 40 பேர் கலந்து கொண்டனர். சில்பாலின் முறையில் மண்புழு உர உற்பத்தி பற்றிய செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.